2019 - இதழ் 06 இலவசம்

## ஆனி - 2019

# உள்ளான மனிதன்

## மென்பிரதி

GRACE TABERNACLE
APOSTOLIC CHURCH

gtachurch.ca

# உள்ளான மனிதன்

மாதாந்த சஞ்சிகை - இலவசம்

2019 - இதழ் 06

**இயேசு சொன்னார்:**

**வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**

## கிறேஸ் (ற்)ரபனக்கல்

## வெளியீடு

SCARBOROUGH, ONTARIO, CANADA ☎ 416.613.2909

(f)பின்ச் / மிட்லான்ட் சந்திப்புக்கு அருகில்

நீங்கள் தற்போது கிறிஸ்தவ **ஆவிக்குரிய** ஐக்கியமொன்றிலே இணைந்திருந்தால், அங்கே கருத்தோடு தேவனை சேவித்து, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தி, இயேசு கிறிஸ்துவுக்குள், உங்களைக் குறித்ததான பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுங்கள்.

# இந்த இதழில்...

## 2019 - இதழ் 06


## 4 என் கண்களை ஏறெடுப்பேன்

சத்துரு கொல்லவும் அழிக்கவுமேயன்றி வேறேதற்கும் வரான். நானோ மனிதருக்கு ஜீவனுண்டாகவும் அது பரி பூரணப்கபடவுமே வந்தேன் என்று இயேசு கூறியுள்ளார்.

## 6 பந்தயப் பொருளை நோக்கி

இதே வண்ணமாக தேவ ஜனங்கள், தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்படிந்து, ஒருமனப்பட்டு, தங்கள் வாழ்க்கையை தேவனுக்கு ஒப்புக் கொடுத்து வாழும் போது, அவர்கள் ஐசுவரியவான்களாக இருந்தாலும், ஏழைகளாக இருந்தாலும், தேவன் அவர்களோடிருப்பபார்.

## 10 பிரசங்கக் குறிப்புகள்

எங்கள் வாழ்க்கையின் கிரியைகள், அதாவது எங்கள் நடக்கைகள், எங்கள் உடைகள், எங்கள் பேச்சுகள், யாவும் பக்திவிருத்திக்கேற்றவைகளாக இருக்க வேண்டும்.

## 12 புதிய நாளுக்குள்...

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.



**கிறேஸ் (ற்)ரபனக்கல்**

**210 Silver Star Blvd., Unit #807**
**Scarborough, ON M1V 5J9 Canada**

☎ 416.613.2909 info@gtachurch.ca


gtachurch.ca

# புதிய நாளுக்குள்...

அனுதின தியானக் குறிப்புக்கள்

## தலைப்பு அகராதி

12ம் பக்கத்திலிருந்து...

**மனக்குழப்பமான, சோர்வான நேரங்களில்**
... ஆனி 1, 4, 12, 19, 20, 24, 25, 28, 30

**போராட்டங்களில், பிசாசின் தந்திரங்களில் வெற்றி**
... ஆனி 1, 2, 4, 12, 18, 20, 24, 30

**பாவத்திலிருந்து விடுதலையடையும் வழி**
... ஆனி 6, 23, 24, 30

**முக்கிய தீர்மானங்களை எடுக்கும் முன்**
... ஆனி 5, 13, 17, 19, 23, 30

**ஜெபத்தின் மேன்மை**
... ஆனி 21

**நற்செய்தியை கூறுங்கள்**
... ஆனி 8, 10, 15

**சகோதர சிநேகத்தில் நிலைத்திருங்கள்**
... ஆனி 7, 10, 11, 22, 27

**தேவனுக்கு பிரியமான வாழ்க்கை**
... ஆனி 2, 3, 5, 7 , 8, 9, 10 , 11 , 15, 19 , 24, 27, 28, 29, 30

**சமாதானமும் அமரிக்கையுமான வாழ்க்கை உண்டு**
... ஆனி 4, 14, 19, 24, 25, 28

**பொறுமையோடு காத்திருங்கள்**
... ஆனி 1, 2, 12, 14, 18, 26

**தேவ நீதி வெளிப்படும்**
... ஆனி 1, 2, 22, 23, 24, 26

**திவ்விய சுபாவங்கள் வெளிப்படட்டும்**
... ஆனி 3, 5, 7, 9, 10 , 11, 22 , 27, 28, 29, 30

**வாழ்வு தரும் திருவசனம், ஐக்கியத்தின் மேன்மை**
... ஆனி 6, 13, 15, 18, 25, 30

**மேட்டிமை, வன்மம், பகை தலைதூக்கும் போது...**
... ஆனி 16, 17, 18, 19, 23

# என் கண்களை ஏறெடுப்பேன்

*போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்*

“எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்.”

இக்கட்டும் இன்னல்களும் வாழ்க்கையில் சூழும்போது மனிதர்கள் இயல்பாகவே தமக்கு ஒத்தாசையைத் தேடுவார்கள். எப்படியாகிலும் தமக்குண்டான இக்கட்டிலிருந்து விடுபடவேண்டும் என்று முயற்ச்சி செய்வார்கள்.

இன்னும் சிலர் தமது விருப்பங்களை அடையும்படி, அதற்குதவுபவர்களை நாடுவார்கள். வேறு சிலர் தமது அற்ப ஆசைகளை, தகாத விருப்பங்களை நிறைவேற்ற அதற்கேற்ற வழிகளை நாடி ஓடுவார்கள்.

நன்மையான ஈவுகள் பரத்திலிருந்து தேவனாலே அருளப்படுகின்றது. மனிதருக்கு செம்மையாய்த் தோன்றும் வழிகளுண்டு. அவற்றின் முடிவோ மரணமாயுள்ளது. அவை நித்திய நன்மையை மனிதர் வாழ்வில் உண்டுபண்ணமாட்டாது. அதனாலே முடிவு மரணமாயுள்ளது.

தேவனுடைய வழிகளோ உயர்ந்தவைகள். பூமிக்கு வானம் எவ்வளவு உயர்ந்ததோ அப்படியே தேவனுடைய வழிகளும் அவரது யோசனைகளும் மனிதருடைய வழிகளையும் யோசனைகளையும் விட உயர்ந்தவைகள். தேவனுடைய வழிகள் ஜீவனும் சமாதானமுமாம்.

நீர் எனக்குச் செவிகொடுத்து, எனக்கு இரட்சிப்பாயிருந்தபடியால், நான் உம்மைத் துதிப்பேன். வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று. அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது, என்று எழுதியுள்ளபடி கண்கள் ஆச்சரியப்படத்தக்கதாய் தேவன் பெரிதான நன்மைகளை செய்கின்றவராயுள்ளார்.

சத்துரு வெள்ளம் போல் வருவான், ஆவியானவரோ கொடியேற்றுவார். ஜெயம் கர்த்தரால் வரும்.

சத்துரு கொல்லவும் அழிக்கவுமேயன்றி வேறேதற்கும் வரான். நானோ மனிதருக்கு ஜீவனுண்டாகவும் அது பரிபூரணப்;படவுமே வந்தேன் என்று இயேசு கூறியுள்ளார். ஜீவனானது மரணத்தைப்பார்க்கிலும் பலமுள்ளது.

இயேசு மரணத்தை ஜெயித்தார். ஜீவனின் அதிபதியாகிய இயேசு தமது நன்மைகளினாலும் சமாதானத்தினாலும் நிறைத்து வழி நம்மை நடத்துவார்.

கர்த்தரை நம்பி நன்மைசெய், தேசத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்துகொள். கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு, அவர் உன் இருதய த்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார். உன் வழியைக் கர்த்த ருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு, அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார். உன் நீதியை வெளிச்சத்தைப்போலவும், உன் நியாயத்தைப் பட்டப்பகலைப்போலவும் விளங்கப்பண்ணுவார், என்று எழுதியுள்ளபடி அவரே உன் காரியத்தை வாய்க்கப்பண்ணி உன் தலையை நிமிரச் செய்கின்றவராயுள்ளார்.

தேவன் உனக்கு அடைக்கலமானவர். அவரது சத்தியம் உனக்குப் பாரிசையும் கேடகமாம். ஓர் போர் வீரனுக்கு பரிசையும் கேடகமும் யுத்தத்தில் உதவுவது போன்று, உனது எல்லா இக்கட்டிலும் உன்னைக் காக்கும்படி அவரது உண்மை உன்னைச் சூழ்ந்து இருக்கின்றது.

உன்னைக் காக்கும் தேவன் தூங்குவதுமில்லை உறங்குவதுமில்லை. அவர் உன்னையும் உன் நிலையையும் அறிந்திருக்கிறார். தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்.

பிரியமான சகோதரனே சகோதரியே,

தேவனை நோக்கி உன் கண்களை ஏறெடுப்பாயாக. தம்மை தேடு கின்றவர்களுக்கு, உண்மையாய் தம்மைத் தேடுகின்றவர்களுக்கு அவர் சமீபமாயுள்ளார். தளர்ந்து போகாதே, அவர் உண்மையுள்ளவார். அவர் ஓத்தாசைகளை உனக்கு அனுப்புவார்.

**எம்மோடு கூட ஜெபிக்க விரும்பினால் ஞயிறு காலை 10:00 மணிக்கு தேவ ஆராதனையில் கலந்து கொள்ளும்படி உங்களை அன்போடு அழைக்கின்றேன்.**

## கிருபையின் கூடார அப்போஸ்தல சபை

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

gtachurch.ca

# பந்தயப் பொருளை நோக்கி

இஸ்ரவேலின் ராஜாவாகிய தாவீது, தேவனுக்கென்று ஒரு ஆலயம் கட்ட வேண்டும் என்று வாஞ்சையாயிருந்தான். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் தாவீதை நோக்கி: உன் கர்ப்பப்பிறப்பாகிய குமாரனே அந்த ஆலயத்தை கட்டுவான் என்று கூறினார். தாவீது ராஜா: தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, தேவனுக்கென்று ஆலயத்தை கட்ட தான் முற்படாமல், அதற்குரிய ஆயத்தங்களை செய்து வைத்தான். ஆலயம் கட்டப்பட வேண்டிய இடத்தை தெரிந்து கொண்டு, கர்த்தருக்கென்று தன்குமாரனால் கட்டப்படும் ஆலயம் சகல தேசங்களிலும் கீர்த்தியும் மகிமையும் உடையதாய் விளங்கும்படி மகா பெரியதாயிருக்கவேண்டும் என்று தன் மரணத்திற்கு முன்னே பொருட்களை திரளாய்ச் சேர்த்து வைத்தான்.

மேலும் தாவீது தன் குமாரனுக்கும் அவனோடிருந்த பிரபுக்களுக்கும் கூறிய அறிவுரையானது: இதோ, நான் என் சிறுமையிலே கர்த்தருடைய ஆலயத்திற்காக ஒரு லட்சம் தாலந்து பொன்னையும், பத்துலட்சம் தாலந்து வெள்ளியையும், நிறுத்து முடியாத திரளான வெண்கலத்தையும் இரும்பையும் சவதரித்தும், மரங்களையும் கற்களையும் சவதரித்தும் வைத்தேன், நீ இன்னும் அவைகளுக்கு அதிகமாய்ச் சவதரிப்பாய். வேலை செய்யத்தக்க திரளான சிற்பாசாரிகளும், தச்சரும் கல்தச்சரும் எந்த வேலையிலும் நிபுணரானவர்களும் உன்னோடிருக்கிறார்கள். பொன்னுக்கும், வெள்ளிக்கும், வெண்கலத்துக்கும், இரும்புக்கும் கணக்கில்லை. நீ எழும்பிக் காரியத்தை நடப்பி கர்த்தர் உன்னோடே இருப்பாராக என்றான்.

இப்போதும் நீங்கள் உங்கள் இருதயத்தையும், உங்கள் ஆத்துமத்தையும், உங்கள் தேவனாகிய கர்த்தரைத் தேடுகிறதற்கு நேராக்கி, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியையும் தேவனுடைய பரிசுத்தப் பணிமுட்டுகளையும், கர்த்தருடைய நாமத்திற்குக் கட்டப்படும் அந்த ஆலயத்திற்குள் கொண்டுபோகும்படிக்கு நீங்கள் எழும்பி, தேவனாகிய கர்த்தரின் பரிசுத்த ஸ்தலத்தைக் கட்டுங்கள் என்றான்.

தாவீதின் குமாரனாகிய சாலமோனும், அவனோடிருந்த பிரபுக்களும், ஜனங்களும், இடாம்பீகமாக ஆலயத்தைக் கட்டினார்கள். ஆலயத்தை கட்டி முடித்தபின், பிரதிஷ்டையின் நாளிலே, ஆசாரியர்கள் ஊழியஞ் செய்கிறதற்கு நிற்க்கக்கூடாதபடிக்கு, கர்த்தருடைய மகிமை கர்த்தரு டைய ஆலயத்தை நிரப்பிற்று. (1 இராஜாக்கள் 8:1-28, 1 நாளாகமம் 22:1-19, 2 சாமுவேல் 7:1-29)

தேவனுடைய வார்தைக்கு கீழ்ப்படிந்து, கர்த்தரைத் தேடுகிறதற்கு ஆத்துமாவை நேராக்கி, நாம் ஒருமனப்பட்டு கிரியை நடப்பிக்கும் போது, அந்த இடம் விலையேறப்பெற்ற வஸ்துக்களினால் கட்டப்பட்ட பிரமாண்டமான கட்டிடமாக இருந்தாலும், அல்லது தென்னோலைகளால் வேயப்பட்ட குடிலாக இருந்தாலும், அங்கே தேவனுடைய பரிசுத்த பிரசன்னம் நிரம்பி இருக்கும். அங்கே தேவ பிரசன்னம் இருப்பதால், அந்த ஸ்தலம் பரிசுத்தமுள்ளதாயிருக்கும்.

காலங்கள் கடந்து சென்ற பின்பு, தேவனுக்கு பரிசுத்தம் என்று பிரதி ஷ்டை செய்யப்பட்ட இடத்திலே மனிதர்கள் தங்கள் அருவருப்புக்களை செய்து வந்தார்கள்.

பலிபீடத்தின் வாசலுக்கு வடக்கே பார்த்தேன் நடையிலே எரிச்சலுண் டாக்குகிற அந்த விக்கிரகம் இருந்தது. உள்ளே, இதோ, சகலவித ஊரும்பிராணிகளும் அருவருப்பான மிருகங்களுமாகிய இவைகளின் சுரூபங்களும், இஸ்ரவேல் வம்சத்தாருடைய நரகலான சகல விக்கிரக ங்களும் சுவரில் சுற்றிலும் சித்திரந்தீரப்பட்டிருந்தன. அவனவன் தன்தன் கையிலே தன்தன் தூபகலசத்தைப் பிடித்துக்கொண்டு, அவைகளுக்கு முன்பாக நின்றார்கள், தூபவர்க்கத்தினால் மிகுந்த புகை எழும்பிற்று. ஆலயத்தின் உட்பிராகாரத்திலே கர்த்தருடைய ஆலயத்தின் வாசல் நடையிலே மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே, ஏறக்குறைய இரு பத்தைந்து புருஷர், தங்கள் முதுகைக் கர்த்தருடைய ஆலயத்துக்கும் தங்கள் முகத்தைக் கீழ்த்திசைக்கும் நேராகத் திருப்பினவர்களாய்க் கிழ க்கே இருக்கும் சூரியனை நமஸ்கரித்தார்கள்.

தேவனாகிய கர்த்தர் தன்னுடைய ஊழியராகிய எசேக்கியல் என்பவரை நோக்கி: மனுபுத்திரனே, அவர்கள் செய்கிறதைக் காண்கிறாயா? என் பரிசுத்த ஸ்தலத்தைவிட்டு என்னைத் தூரமாய்ப் போகப்பண்ணும்படியாக இஸ்ரவேல் வம்சத்தார் இங்கே செய்கிற மிகுந்த அருவருப்புகளைக் காண்கிறாய் அல்லவா?

அவர்கள் தேசத்தைக் கொடுமையினால் நிரப்பி என்னை அடிக்கடி கோபமூட்டுகிறார்கள் இதோ, அவர்கள் திராட்சக்கிளையைத் தங்கள் நாசிக்கு நேராகப் பிடிக்கிறார்கள். தாங்கள் மிகுந்த அருவருப்புக்களை செய்து கொண்டு, கர்த்தர் எங்களைப் பார்க்கிறதில்லை, கர்த்தர் தேசத்தைக் கைவிட்டார் என்று சொல்லுகிறார்களே என்றார்.

ஆகையால் நானும் உக்கிரத்தோடே காரியத்தை நடத்துவேன் என் கண் தப்பவிடுவதில்லை, நான் இரங்குவதில்லை. அவர்கள் மகா சத்த மாய் என் செவிகள் கேட்கக் கூப்பிட்டாலும் அவர்களுக்கு நான் செவி கொடுப்பதில்லை என்றார். கர்த்தருடைய மகிமை ஆலயத்தைவிட்டு நீங்கிப் போனது. இப்போது அந்த இடாம்பீகமான கட்டிடமே அவர்க ளுக்கிருந்தது. அந்த கட்டிடத்தை நிர்மூலமாக்கும்படி தேவனாகிய கர்த்தர் தாமே, ஒரு அந்நிய தேசத்து ராஜாவை ஏற்படுத்தினார்.

தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல், தங்கள் ஆத்துமத்தைப், கர்த்தரைத் தேடுகிறதற்கு நேராக்காமலும், பிரிவினையுடன், அவனவன் தன்தன் காரியங்களை நடப்பிக்கும் போது, அந்த இடம் விலையேற ப்பெற்ற வஸ்துக்களினால் கட்டப்பட்ட பிரமாண்டமான கட்டிடமாக இரு ந்தாலும், அல்லது தென்னோலைகளால் வேயப்பட்ட குடிலாக இருந்தா லும், அங்கே தேவனுடைய பரிசுத்த பிரசன்னம் இருக்கமாட்டாது. அங்கே தேவ பிரசன்னம இல்லாதிருந்தால், அந்த ஸ்தலத்தை மனிதர் கள் எப்படிப்பட்ட பெயரை சூடி அழைத்தாலும், அங்கே தேவனுடைய பரிசுத்தம் இருக்கமாட்டாது.

தேவனுடைய ஆசாரியர்கள் தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, அவருடைய வார்த்தையின்படி, தேவனுடைய சித்தத்தை செய்யும்

போது, அந்த ஆசாரியர்கள், பிரமாண்டமான கட்டிடங்களில் ஆராதித்து வந்தாலும், ஏழைக் குடிலில் ஆராதித்து வந்தாலும், அவர்களின் ஆராதனையில் தேவன் பிரியமுள்ளவராக இருப்பார். தேவன் அவர் களோடிருந்து, அவர்கள் வழியாக தம்முடைய திருச்சித்தத்தை நிறை வேற்றுவார். ஆனால் தேவனுடைய ஆசாரியர்கள், தேவனுடைய கட்ட ளைகளை மறந்து, அவருடைய வார்த்தையை புறக்கணிக்கும் போது, அந்த ஆசாரியர்கள், பிரமாண்டமான கட்டிடங்களில் ஆராதித்து வந்தா லும், ஏழைக் குடிலில் ஆராதித்து வந்தாலும், அவர்களுடைய ஆரா தனை தேவனுக்கு அருவருப்பாக இருக்கும். தேவன் அவர்களோடு இரு க்க மாட்டார்.

இதே வண்ணமாக தேவ ஜனங்கள், தேவனுடைய வார்த்தைக்கு கீழ் படிந்து, ஒருமனப்பட்டு, தங்கள் வாழ்க்கையை தேவனுக்கு ஒப்புக் கொடு த்து வாழும்போது, அவர்கள் ஐசுவரியவான்களாக இருந்தாலும், ஏழை களாக இருந்தாலும், தேவன் அவர்களோடிருப்பார். ஆனால், ஜன ங்கள், தேவனுடைய வார்த்தையை அசட்டை செய்து, பிரிவினையுடன், தங்கள் கண்போனபடி வாழ்ந்து வந்தால், அவர்கள் ஐசுவரியமுள்ளவ ர்களாக இருந்தாலும், ஏழைகளாக இருந்தாலும், தேவன் அவர்களோடி ருக்க மாட்டார்.

எங்கள் வாழ்க்கையின் இலட்சியம் பரம அழைப்பின் பந்தையப் பொரு ளை பற்றியதாகும். நித்திய ஜீவனை (மோட்ச வாழ்வை) இழந்து போகமால், அதை சுதந்தரித்துக் கொள்ளும்படிக்காய், தேவனுக்குப் பய ந்து, அவர் கற்பனைகளின் படி வாழ வேண்டும்.

வாழ்வின் பந்தையப் பொருளை மறந்துபோன பலர், தங்கள் வாழ்வில், உள்ளான மனிதனில் ஏற்படவேண்டிய திவ்விய மாற்றங்களைக் குறித்த கவனம் ஏதும் இல்லாதவர்களாய், சபையையும், கட்டிடங்களையும் ஊழி யர்களையும் விசுவாசிகளையும், ஐசுவரியத்தையும், ஏழ்மையையும் பற்றி அதிகதிகமாக தர்க்கித்து, ஜனங்கள் மத்தியிலே பலவிதமான மாறு பாடுகளை உண்டாக்கி வருகின்றார்கள். நாங்கள் இந்த ஆகாத சம்பாஷணைகளால் இழுப்புண்டு போய்விடக்கூடாது. எங்கள் கண்களை பந்தயப் பொருளின் மேல் பதியவைப்போம்.

ஆதியிலே தேவன் தூய மெய்விவாகத்தை ஏற்படுத்தினார். ஆனால், மனி தர்கள் பலர் ஆதியிலிருந்து அதை அசுத்தப்தப்படுத்தி தங்கள் இச்சை களை நடப்பிக்கும்படி, மோகபாவத்திற்கு ஒப்புக் கொடுத்தார்கள். இத னால், தேவன் ஏற்படுத்திய மெய்விவாகம் அற்றுப் போய்விட்டாதா? இல்லை! தேவனுடையவர்களாக தேவனுக்குப் பயந்து அவர் வழிகளில் வாழும் அவருடைய பிள்ளைகள் தூய மெய்விவாகத்தை எப்போதும் பேணிக் காக்கின்றார்கள். நோயாளிகளுக்கு வைத்தியம் செய்யும்படி வைத் தியர்களை தேவன் அனுக்கிரம் செய்திருக்கின்றார். ஆனால், ஆங்கா ங்கே, நோயாளிகளுடன், தவறுதலாய் நடக்கும் ஒரு சில வைத்தியர்க ளால், வைத்தியசாலைகளை மூடி, வைத்தியர்களை அகற்றி, அவன வன் தன் தன் வீடுகளில் வைத்தியம் செய்தல் சாத்தியமாகுமோ? இல்லை! மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களில் ஒரு சிலர், ஆங் காங்கே, மாணவர்களுடன் தகாதவிதமாக நடந்து கொள்கின்றார்கள், அதனால் பாடசாலைகளை மூடி, ஆசிரியர்களை அகற்றி, அவனவன்

தன்தன் வீடுகளில் படித்தல் சாத்தியமாகுமா? நாட்டைப் பாதுகாக்கும் காவற்துறையினரில் சிலர், ஆங்காங்கே அநீதிகளை செய்து வருவதால், காவற்துறைக் கட்டிடங்களை மூடி, காவற்துறையினரை அகற்றி, அவனவன் தன்தன் பாதுகாப்பை பார்த்துக் கொள்ளட்டும் என்பது சரியாகுமா? இல்லை! பல அருமையான ஆசிரியர்கள், வைத்தியர்கள் காவற்துறையினர், மற்றும் அநேக நன்மை தரும் தொழிலாளிகளை தேவன்தாமே எங்களுக்கு அனுக்கிரகம் செய்திருக்கின்றார். அதுபோலவே தேவனை ஆராதிக்க அமைக்கப்பட்ட கட்டிடங்களும், அங்கே கூடி வரும் தேவ சபையும், அதை வழிநடத்த நியமிக்கப்பட்ட ஊழியர்களும் இருக்கின்றார்கள். அநேக ஞான நன்மைகளை தேவன் சபை வழியாக எங்களுக்கு அருளுகின்றார். ஆங்காங்கே சில வேண்டப்படாத நிகழ்வுகள் நடைபெறலாம். அதனால் சபையைக் குறித்த தேவனுடைய வாக்குத்தத்தம் அவமாய் போய்விடுமோ? இல்லை! தேவனுடைய தாசர்கள் பலர், தேவ பணியை கருத்தோடு செய்து வருகின்றார்கள். கர்த்தராகிய இயேசு வரும் போது, அவர் அவனவனுடைய கிரியைகளுக்கு தக்க பலனைக் கொடுப்பார். அந்நாளிலே நானும் நீங்களும் எங்கள் பலன்களையும் பெற்றுக் கொள்வோம்.

ஆதி அப்போஸ்தலர்கள், எருசலேம் தேவாலயத்திலும், அன்றைய நாட்களின் பட்டணங்களிலும், கிராமங்களிலும் இருந்த ஜெப ஆலயங்களிலும், சந்தை வெளிகளிலும் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை பிரசங்கித்து வந்தார்கள். பிற்பாடு உபத்திரவங்கள் பெருகின போதோ, யூதருடைய ஆலயங்களில், இவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். எனினும் கட்டிடங்கள் அவர்களுடைய ஆராதனைக்குத் தடையாக இருக்கவில்லை, இதனால் இவர்களின் சபைகூடிவருதல் வீடுகளில் நடைபெற்றது. பல கிறிஸ்தவர்கள் அடிக்கப்பட்டார்கள், கொலை செய்யப்பட்டார்கள், சிங்கங்களுக்கு இரையாக கொடுக்கப்பட்டார்கள். இதனால், இரகசிய சபைகளும் இயங்கி வந்தன. இன்றும் சில நாடுகளில் இப்படியான நெருக்கடிகளின் மத்தியிலே பல இடங்களிலே சபைகூடி வருகின்றார்கள். சுதந்திரமுள்ள நாடுகளிலோவெனில், தேவ ஆலயங்களிலே கூடி வருகின்றார்கள்.

இன்றைய உலகில், வாழும் பல மனிதர்கள், நாட்டின் யுத்த நிலை காரணமாக, வீடுகளிலும், முகாம்களிலும், மரத்தின் நிழலிலும் சபைகூடி வந்த அனுபவமுடையவர்களாக இருக்கின்றார்கள். யுத்த நாட்கள் முடிந்ததும், மறுபடியும் தேவ ஆலயங்களிலே கூடுகின்றார்கள். தேவனுக்கு கீழ்ப்படிகின்ற தேவ பிள்ளைகளை பொறுத்த வரையில், திரும்பவும் யுத்தம் ஏற்பட்டால் கூட, மனிதர்களோ, கட்டிடங்களோ, அசௌகரியங்களோ எவையாகிலும் அவர்கள் சபைகூடிவருதலை தடைசெய்ய முடியாது.

எங்கள் இரட்சகரும் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்து தாமே இந்த பூவுலகிலே வாழ்ந்த நாட்களில், அன்றைய இஸ்ரவேல் நாட்டில் இருந்த பல ஊர்களுக்கு பிரயாணப்பட வேண்டியதாக இருந்தது. அன்றைய நாட்களில் போக்குவரத்துக்கு உபயோகித்தவைகளையே கர்த்தரும் பயன்படுத்தினார். சில இடங்களிலே படகில் பிரயாணப்பட்டார். பொதுவாக மனிதர்கள், அந்த நாட்களில் கழுதைகளில் பிரயாணப்பட்டார்கள். பவுல் போன்ற ஊழியர்கள், கப்பலில் பலநாடுகளுக்குச் சென்றார்கள். பல இடங்களுக்கு கால்நடையாகவும் சென்று வந்தார்கள். ஆனால்

இன்றைய நாட்களிலே நாடுவிட்டு நாடு செல்ல ஆகாய விமானங்களையும், அதி நவீன புகையிரதங்களையும், பேருந்துகளையும், மோட்டார் வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள், துவிசக்கரவண்டிகள் போன்றவற்றை உபயோகிக்கின்றோம். கர்த்தர் ஆகாயவிமானத்தை உபயோகிக்கவில்லை ஆதலால் நாங்கள் அதை உபயோகிக்கக்கூடாது என்று கூறுவது மதியீனமான பேச்சாக இருக்கும் அல்லவா! அது போலவே, அன்றிருந்த ஆலய கட்டிடங்கள் இன்றைய அமைப்புக்களிலிருந்து முற்றாக வேறுபட்டிருக்கின்றது.

தேவனுடைய அநாதித் திட்டம், கட்டிடங்களையும், பொருட்களையும் குறித்ததல்ல, என்னையும் உங்களையும் குறித்தது. நானும் நீங்களும் எங்கள் கண்களை பந்தையப் பொருளின் மேல் பதியவைத்து, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றினால், நாங்கள் நித்திய ஜீவனை பெற்றுக் கொள்வோம். மாறாக, வாழ்க்கையை, கட்டிடங்களையும், பொருட்களையும், மற்றய மனிதர்களையும் குறித்து விமர்சிப்பதில் செலவிடுவோமாக இருந்தால், எமது அழைப்பை விரயப்படுத்துகின்றவர்களாக இருப்போம்.

நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக் கொண்டேன். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும் எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்த்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு என்று தேவ ஊழியராகிய பவுல் அறிக்கையிட்டார். மேலும் அவர் கூறியதாவது, இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும், அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன் குப்பையுமாக எண்ணுகிறேன். நான் அடைந்தாயிற்று,அல்லது முற்றிலும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன். சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை. ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன் என்றார். இதைப்போல நாங்களும் பந்தயப் பொருளை நோக்கி ஓடுவோம்.

**கர்த்தராகிய இயேசு கிறிஸ்துதாமே உங்களை வழிநடத்துவாராக! ஆமேன்.**

# நீங்களே அந்த ஆலயம்

**பிரசங்கக் குறிப்புக்கள்** - போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

**[IF YOU WOULD LIKE TO LISTEN TO THE FULL VERSION OF THIS MESSAGE IN ENGLISH OR TAMIL, FOLLOW THE LINK THAT IS PROVIDED AT THE END THIS SERMON NOTES]**

**பிரதான வசனம் :** ஏசாயா 66:1-2

மனிதர்கள் தேவனுக்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டலாம். கர்த்தர் வாசம் செய்வதற்கு என்று ஒரு இடத்தை ஏற்படுத்தலாம். ஆனால் நீங்கள் கட்டும் ஆலயம் எப்படிப்பட்டதாக இருக்கும் என்று கர்த்தர் கேட்கின்றார். கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், வானம் எனக்குச் சிங்காசனம், பூமி எனக்குப் பாதபடி நீங்கள் எனக்குக் கட்டும் ஆலயம் எப்படிப்பட்டது? நான் தங்கியிருக்கும் ஸ்தலம் எப்படிப்பட்டது? ஒரு கட்டிடத்தை கட்டி நீர் இங்கே தங்கி இரும் என்று கூறுவதற்கு சகலத் தையும் படைத்த தேவன் வாசஸ்தலம் அற்றவராக இருக்கின்றாரா? பூமியிலுள்ள மனிதர்கள் சேர்ந்து ஆராதிப்பதற்கும், தேவனுடைய நாம த்தில் ஒன்று கூடி அவருடைய மகிமையை வெளிப்படுத்துவதற்காகவும் நாங்கள் தேவனுக்கென்று ஆலயத்தை அமைக்கின்றோம்.

நாங்கள் தேவனுடையவர்களானால், நாங்கள் அவரைப் பின்பற்றுகி ன்றவர்களாக இருக்க வேண்டும். அவர் என்னத்தை செய்யும்படி சொல்கின்றாரோ, அதையே நாங்கள் செய்ய வேண்டும். ஆனால், தேவனைப் பின்பற்றுகின்றேன் என்று கூறும் சில மனிதர்களுடைய வாழ்க்கையிலே மாயமான காரியங்கள் நடைபெறுகின்றது. அதாவது, உலக காரியங்களிலே இருக்கும் ஆசையினாலே, அந்த பாவ காரிய ங்களுக்கு முன் “கிறிஸ்தவம்” என்ற சொல்லை போட்டுவிட்டு, அவைக ளினாலே தங்கள் இச்சைகளை நிறைவேற்றுகின்றார்கள். அவர்கள் கிறிஸ்துவினுடையவர்கள் அல்லர். எங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் தேவ னுக்கு முன்பதாக கறை திறை அற்றதாக இருக்க வேண்டும். அதன் பொருட்டு, நாங்கள் அவைகளை தேவனுக்கு முன்பாக பரிசுத்தமாக காத்துக் கொள்ள வேண்டும். ஆனால் மனிதர்கள், இவைகளை தங்கள் ஆசை இச்சைகளை நிறைவேற்றுவதற்காக தங்கள் சொந்த வழிகளிலே கொண்டு செல்கின்றார்கள். இவர்கள் தேவன் காட்டிய வழியை விட் டுவிட்டு தங்கள் சொந்த வழிகளையே தெரிந்து கொள்கின்றார்கள்.

எங்கள் இருதயத்திலே நாங்கள் இச்சையை வைத்துக் கொண்டிருப்பது பாவம். அதே வேளையிலே மற்றவர்கள் இச்சிக்கும்படிக்கு நாங்கள் இடறலாக இருப்பதும் பாவம்.

எங்கள் வாழ்க்கையின் கிரியைகள், அதாவது எங்கள் நடக்கை, எங் கள் உடை, எங்கள் பேச்சு, யாவும் பக்திவிருத்திக்கேற்றவைகளாக இரு க்க வேண்டும். கிறிஸ்தவம் என்பது பெயரளவில் இருப்பதில்லை. கிறி ஸ்தவம் என்பது நாங்கள் தேவனைச் சார்ந்து அவருடைய வழியிலே வாழும் வாழ்க்கையாக இருக்கின்றது. தேவனுடைய காரியங்கள்,

பரியாசத்துக்கும் நகைச்சுவைக்கும் உரியது அல்ல. இந்த பூமியிலே மனிதர்கள் தங்களது ஆவி ஆத்துமா சரீரத்தை தகாத முறையிலே உபயோகிக்கின்றார்கள். அவைகளை அசுதத்திற்கு ஒப்புக் கொடுகின்றார்கள். ஆனால் தேவனுக்குரிய பரிசுத்தத்தில் அவைகளுக்கு இடம் இல்லை. எங்கள் ஆவி ஆத்துமா சரீரம் கர்த்தருடையது எனவே அவை பரிசுத்த மாக காக்கப்படவேண்டும்.

கர்த்தரை கவர்ந்து கொள்ளும்படி எத்தகைய ஆலயத்தை மனிதனால் கட்ட முடியும்? கர்த்தர் ஆலய கட்டிடத்தை அல்ல அந்த கட்டிடத்தை கட்டும் மனிதனுடைய இருதயத்தைப் பார்க்கின்றார். தம்முடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதையே கர்த்தர் விரும்புகின்றார். எடுத்துக் காட்டாக, தேவன் ஒரு குறிப்பிட்ட காரியத்தை நீ செய்யாதே என்று சொன்னால், அதற்கு பின், அதைக் குறித்த பேச்சுக்கு எங்கள் வாழ்க்கையில் இடம் இருக்கக்கூடாது. மற்றவன் அப்படி செய்கின்றானே நான் ஏன் அப்படி செய்ய முடியாது என்ற பேச்சுக்கு இடம் இருக்கக் கூடாது. தேவன் அதை செய்யாதே என்று கூறினால் அதற்கு என் வாழ்வில் இடம் இல்லை என்று விட்டுவிட வேண்டும். அதையே கர்த்தர் விரும்பு கின்றார்.

இந்த பூமியிலே நாகரீகம் என்ற போர்வையிலே பலவிதமான ஆடைகளை ஆண்களும் பெண்களும் அணிந்து வருகின்றார்கள். உலக மனிதர்களின் பார்வையிலே அவைகள் கவர்ச்சியாக இருக்கின்றது. அதை சந்தைப் படுத்துவோர் பெரிதான இலாபத்தை அடைகின்றார்கள். ஆனால் அந்த ஆடைகள் என் சரீரத்தில் போட்டுக் கொள்வதற்கு தகுதியாக இருக்கின்றதா என்பதை நான் தான் தீர்மானிக்க வேண்டும். அந்த ஆடைகளின் விலை சந்தைப்படுத்தும் மனிதர்களால் நிர்ணயிக்கப்பட்டவைகள். ஆனால் இந்த சரீரம் தேவனால் எனக்கு கொடுகப்பட்டது. இந்த சரீரம் தேவனுடைய நாமத்தை மகிமைப் படுத்ததுகின்றதாகக் காணப்படவேண்டும். இச்சைகளை உண்டு பண்ணுகின்ற இடமாக என் சரீரத்தை மாற்றிவிடக் கூடாது.

மனிதர்களின் மத்தியிலே அங்கீகாரம் பெறும்படியாய் நாங்கள் வாழ்பவர்கள் அல்ல. தேவன் இல்லாத வாழ்க்கை பிரயோஜனம் அற்றது. தேவன் எங்களோடிருந்தால், எங்கள் நடை உடை பேச்சு தேவனை மகிமைப்படுத்த வேண்டும். எங்களுடைய உடை, எங்களுடைய நடக்கை, எங்களுடைய பேச்சுக்கள் இந்த உலக மனிதர்களுக்கு அலுப்பு நிறைந்ததாக இருக்கலாம். அவர்கள் பார்வையிலே நாகரீகமற்றதாக இருக்கலாம். இயேசு கிறிஸ்துவின் விலை மதிக்க முடியாத இரத்தத்தினாலே மீட்கப்பட்டோம். கிரயத்திற்கு கொள்ளப்பட்டோம். நாம் நம்முடையவர்கள் அல்லர். கர்த்தர் தம்முடையவர்களுக்குள்ளும், அவர்கள் மத்தியிலும் வாசம் செய்ய விரும்புகின்றார். நாங்கள் அவர் தங்கும் ஆலயமாக இருக்கின்றோம்.

[இந்த தேவ செய்தியின் முழுமையான ஒலிப்பதிவை பின்வரும்

இணையத் தளத்தில் (**INTERNET WEBSITE** இல்)

தமிழ் ஆங்கில மொழிகளில் கேட்கலாம்.]

# கர்த்தர் எங்கள் சார்பில்

இயேசு என்னும் நாமத்தை குறித்து நல்ல அறிக்கை செய்யும்படி அழைக்கப்பட்ட தேவபிள்ளைகள், இன்று, குடும்பம், நண்பர்கள், அயலவர்கள், அதிகாரிகள், மற்றும் சக உறுப்பினர்களால் வரும் அழுத்தங்களினால் பயந்து வாழ்கின்றார்கள். ஏனெனில், மற்றவர்களால் நாங்கள் புறக்கணிக்கப்பட்டு விடுவோமோ அல்லது எங்கள் பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கை எப்படியாகுமோ என்ற பயம் அவர்களை ஆட்கொண்டு விடுகின்றது. இயேசுவை பற்றி நல்ல அறிக்கை செய்து வாழ்வதால், பல உபத்திரவங்களுக்கு முகங்கொடுக்க நேரிடலாம் என்றும், சில வேளைகளிலே உயிர் ஆபத்து வரலாம் என்ற பயமும் ஏற்பட்டுவிடுகின்றது இவைகளால் பல மனிதர்கள் தினமும் அழுத்தப்படுகின்றார்கள். இயேசு சொன்னார்: “ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல், அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது. உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. ஆதலால், பயப்படாதிருங்கள் அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள். மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன். மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன். ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம் ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்.” பிதாவாகிய தேவன், நல்லோர் மேலும் தீயோர் மேலும் சூரியனை உதிக்கப்பண்ணி, மழையைப் பொழிகின்றார். அதாவது, தம்மை எதிர்க்கின்ற மனிதர்களில் கூட அவர் நீடிய பொறுமையாய் இருந்து, அவர்கள் மனந்திரும்பும்படி, நன்மை செய்கின்றார். அப்படியானால் தாம் தெரிந்து கொண்ட பிள்ளைகளின் விடயத்தில் இன்னும் அதிக கரிசனையுள்ளவராக இருப்பார் அல்லவா. ஆதலால், பிரியமானவர்களே, பயப்படாதிருங்கள்! கர்த்தர் எங்கள் சார்பில் இருக்கின்றார்.

**மத்தேயு 10:31**

**ஆதலால், பயப்படாதிருங்கள் அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்.**

**ஜெபம்**: பரலோக தேவனே, நீர் எங்கள் சார்பில் இருக்கின்றீர் என்பதின் மேன்மையை நான் உணர்ந்து கொள்ளும்படிக்கு பிரகாசமுள்ள மனக் கண்களைத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நீதியின் கிரீடம்

விசுவாசத்தினாலே, ஆபேல், ஏனோக்கு, நோவா, ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு, யோசேப்பு, கிதியோன், பாராக், சிம்சோன், யெப்தா, தாவீது, சாமுவேல் போன்ற முன்னோடிகள் என்னத்தை சாதித்தார்கள்? அவர்கள், ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், விசுவாசத்தினால் வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள், அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக் கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலன்கொண்டார்கள், யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள். ஸ்திரீகள், சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப்பெற்றார்கள். வேறுசிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலைபெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள் வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள் கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைபார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக் கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும், துன்பத்தையும் அநுபவித்தார்கள். இவர்களில் எவரும் இந்த உலக பொக்கிஷங்களின் மேல் தங்கள் கண்களை பதிய வைக்கவில்லை. மேன்மையானதை அடையும்படிக்காய், மாம்ச கண்களால் காணமுடியாத பரலோகத்தை, விசுவாசக் கண்களால்கண்டு, தங்கள் உயிரையும் தியாகம் செய்யத் தயங்காமல், விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராடினார்கள். மேற்குறிப்பிட்ட பரிசுத்தவான்களின் வரிசையில், எங்களையும் தேவன் தெரிந்து கொண்டார். இந்த உலகத்திற்குரியவைகளை சுதந்தரிக்கும் பொருட்டாக எங்களை தெரிந்து கொள்ளாமல், அழியாததும், நித்தியமானதுமான, மகா மேன்மையான பரலோகத்தை சுதந்தரிக்கும்படிக்காகவே நம்மைத் தெரிந்து கொண்டார். எனவே, விசுவாசத்தைவிட்டு விலகாதபடிக்கு, அதை உறுதியாய் பற்றிக் கொண்டிருப்போமானால், நீதியுள்ள நியாயாதிபதியாகிய இயேசு, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் நீதியின் கிரீடத்தைத் தந்தருளுவார். எனவே சோர்ந்து போகாமல், அதிகமாய் செயற்படுவோம்.

**1 தீமோத்தேயு 6:12**

**விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப்போராடு, நித்தியஜீவனைப் பற்றிக் கொள் அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்**

**ஜெபம்**: நீதியின் தேவனே, உம்முடைய பிரசன்னமாகுதலை விசுவாசித்து அதை வாஞ்சித்து, உம்முடைய நாளிலே நீதியின் கீரிடத்தை பெற்றுக்கொள்ளும்படியான வாழ்க்கை வாழ கிருபை செய்வீராக. .இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தர் நல்லவர்

நீங்கள் ஒரு மனிதனுக்கு மனங்கோணாமல் எப்போதும் நன்மை செய்து கொண்டிருக்க, அந்த மனிதன் உங்களைக் காணும் போதெல்லாம், தன் குறைகளையே கூறிக்கொண்டிருந்தால், அந்த மனிதனைக் குறித்து நீங்கள் என்ன கூறுவீர்கள். இப்படிப்பட்ட மனநிலையுள்ள மனிதர்கள் ஒரு போதும் மனநிறைவு அடைவதில்லை. சமாதானமான வாழ்வு எப்போதும் அவர்களுக்கு தூரமாகவே இருக்கும். எங்கள் தேவன் எப்போதும் நன்மை செய்கின்றவர். அவரிடத்தில் தீமை இல்லை. துன்மார்க்கமான வழியில் நடக்கும் மனிதர்கள் கூட அழிந்து போவதை அவர் விரும்புவதில்லை. நாங்கள் ஆராதிக்கும் தேவன் எப்படிப்பட்டவர் என்ற அறிவில் நாங்கள் வளர வேண்டும். அந்த வளர்ச்சியில் பெருகும்படிக்கு, அவரை துதிக்கும் துதி எப்போதும் எங்கள் வாயிலிருக்க வேண்டும். இன்று நாம் எதிர்நோக்கும் பிரச்சனைகளைப் பற்றி மனம் சோர்ந்து போகாமல், தேவனாகிய கர்த்தர் இன்றுவரை நமக்குச் செய்த நன்மைகளை நினைத்து, அதை அறிக்கையிட்டு, மனப்பூர்வமான நன்றிப்பலிகளை எங்கள் உள்ளத்திலிருந்து எழும்ப வேண்டும். அந்த நன்றி எங்கள் இருதயத்தில் பெருகும் போது, எங்கள் தேவன் யார் என்பதைக் குறித்த அறிவு எங்களுக்குள் பெருகும். தேவன் உங்கள் தேவைகளை சந்திக்கும் போது, அந்த ஆசீர்வாதத்தை கொண்டாடி துதிபலிகளை செலுத்துங்கள். உங்களுக்கு இருந்த பிரச்சனைகளுக்கு ஒத்த பிரச்சனைகளோடு இருக்கும் மற்ற மனிதர்களை தேற்றுங்கள். உங்கள் சாட்சியை பகர்ந்து கொள்ளுங்கள். முடிந்தால் அவர்களுக்கு உதவுங்கள். ஏழைகளுக்கு தானதர்மங்களை வழங்குங்கள். இவை எல்லாவற்றினாலும் தேவனாகிய கர்த்தருக்கு நன்றியைச் செலுத்துங்கள். “நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது. அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளுகிறேன்.” என்று சங்கீத புத்தகத்திலே வாசிக்கின்றோம். எனவே இன்றிலிருந்து, நெருக்கங்கள் அதிகரிக்கின்ற வேளையில், தேவன் செய்த உபகாரங்களை நினைத்து அவருக்கு நன்றி கூறுங்கள். நெருக்கத்தின் மத்தியிலும் அவர் எங்கள் புகலிடமாயிருக்கின்றார் என்பதை நாங்கள் உணரும்படிக்கு அவர் எங்கள் மனக்கண்களை பிரகாசமடையச் செய்வாராக.

**சங்கீதம் 119:68**

தேவரீர் நல்லவரும், நன்மை செய்கிறவருமாயிருக்கிறீர் உமது பிரமாணங்களை எனக்குப் போதியும்

**ஜெபம்**: எப்போதும் நன்மை செய்கின்ற தேவனே, சூழ்நிலைகள் வழியாக நீர் எவ்வளவு நல்லவர் என்பதை உணர்ந்து கொள்ளத்தக்கதாக நன்றி சொல்லும் இருதயத்தை எனக்கும் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பிரகாமுள்ள மனக்கண்கள்

தேவனுடைய ஜனங்கள், எகிப்து தேசத்திலே அடிமைகளாக இருந்த நாட்களிலே, எபிரெயருக்கு (இஸ்ரவேலர் என்று அழைக்கப்பட்ட தேவனுடைய ஜனங்கள்) பிறக்கும் ஆண் குழந்தைகளை கொன்று போடும்படி, எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் கட்டளை பிறப்பித்திருந்தான். அந்நாட்களிலே மோசே பிறந்த போது, அவன் நதியோரமாக நாணலினால் செய்யப்பட்ட பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்த போது, பார்வோனுடைய குமாரத்தி அவனை எடுத்துத் தனக்குப் பிள்ளையாக வளர்த்தாள். மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும் வல்லவனானான். ஆனால் அவனுடைய ஜனங்களோ, ஆளோட்டிகளால் கடும் வேலைகள் செய்யும்படி திணிக்கப்பட்டு, துன் புறுத்தப்பட்டு வந்தார்கள். மோசே நாற்பது வயதான போது, இஸ்ரவேல் புத்திரராகிய தன்னுடைய சகோதரரைக் கண்டு சந்திக்கும்படி அவனுடைய இருதயத்தில் எண்ணமுண்டாயிற்று. அவனுடைய விசுவாச கண்கள் திறக்கப்பட்டதினாலே, தேவன் தம்முடைய ஜனங்களுக்கு கொடுப்பேன் என்ற, இனிவரும் பலனின் மேன்மையை உணர்ந்து கொண்டான். அடிமைத்தனத்திலிருக்கும் தன்னுடைய சகோதரர்கள், வல்லமைமிக்க பார்வோனிடமிருந்து விடுதலையடைக்கூடிய சாத்தியம் ஏதும் இல்லாதிருந்த சூழ்நிலையின் மத்தியிலும், அரண்மனை வாழ்வில் இருக்கும் பொக்கிஷங்களிலும், கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான். இந்த உலகின் அநித்தியமான பாவ சந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டான். எங்கள் வாழ்விலும் தேவன் எங்களுக்கு மேன்மையான பலனை பரலோகில் வைத்திருக்கின்றார். எனவே நாங்கள் தேவனுடைய பிள்ளைகளோடு சேர்ந்து பாடுகளையும் துன்பங்களையும் சகிக்க நேர்ந்தாலும், இந்த உலகம் தரும் சுகபோகங்களில் இழுப்புண்டு பாவம் செய்யக் கூடாது. தேவனுடைய தாசனாகிய மோசேயை போல, எங்கள் விசுவாசக் கண்கள், பிரகாசமடையும்படிக்கு தேவனை வேண்டுவோம்.

**எபிரெயர் 11:25**

**அநித்தியமான பாவ சந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டு,**

**ஜெபம்**: அன்பின் தேவனே, இந்த உலகிலே நாங்கள் எதிர்நோக்கும் சவால்கள் எதுவாக இருந்தாலும், உமக்குள் மகிழ்ச்சியாக இருக்கும்படி என் ஆத்துமாவை காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**புதன் | ஆனி 5** | 📖 மாலை வாசகம் - 1 யோவான் 3:7-8

# நன்மை ஆளக்கடவது

ஒருவனுக்கும் தீமைக்குத் தீமைசெய்யாதிருங்கள், தீமையை வெறுத்து, நன்மையைப்பற்றிக் கொண்டிருங்கள் என்று பரிசுத்த வேதாகமத்திலே வாசிக்கின்றோம். தீமையானது தேவனுடைய குணாதிசயம் அல்ல, எனவே அது தேவனுடைய பிள்ளைகளாகிய எங்களுக்குரியதல்ல. ஒருவன் உங்களுக்கு தீமை செய்யும் போது, அவன் எதிராளியானவனாகிய பிசாசானவனுடைய சதித்திட்டத்தை இந்த பூமியிலே நிறைவேற்றுவதற்கு ஒரு கருவியாக மாறுகின்றான். அந்த தீமைக்குப் பதிலாக, நீங்களும் ஒரு தீமையை செய்யும் போது, பிசாசானவனுடைய சதித்திட்டத்தை ஆமோதிக்கின்றவர்களாக மாறிவிடுகின்றீர்கள். அவனுடைய குணாதிசயம் உங்களில் பெருக ஆரம்பிக்கும். அதனால் பிசாசானவன் உங்கள் வாழ்க்கையிலே வெற்றி கொள்கின்றான். ஆனால், ஒருவர் உங்களுக்கு தீமை செய்யும் போது, அதற்கு பதிலீடாக நீங்கள் அவருக்கு நன்மை செய்வீர்கள் என்றால், நீங்கள் பிதாவாகிய தேவனுடைய குணாதிசயத்தை உங்களில் வெளிப்படுத்துவீர்கள். சில வேளைகளிலே நன்மையை நடப்பிக்கும் சந்தர்ப்பங்கள் இல்லாதிருக்கலாம். அப்படியானால், எப்படி தீமைக்கு நன்மை செய்வது? உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள் உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம்பண்ணுங்கள். அப்படிச் செய்யும் போது, நீங்கள் தேவனுடைய திருச்சித்தத்தை உங்கள் வழியாக நிறைவேற்றுவதால், தேவனுடைய நன்மைகள் உங்கள் வாழ்வில் பெருகும். உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் தங்களைச் சிநேகிக்கிறவர்களைச் சிநேகிக்கிறார்களே. உங்களுக்கு நன்மைசெய்கிறவர்களுக்கே நீங்கள் நன்மை செய்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் அப்படிச் செய்கிறார்களே. இந்த பூமியிலே நன்மை பெருகத்தக்கதாக பிதாவாகிய தேவன்தாமே எங்களை தம்முடைய பிரதிநிதிகளாக ஏற்படுத்தியிருக்கின்றார். நீங்கள் தீமையை எங்கள் மாம்ச பெலத்தாலும், வன்மம், பகை, மற்றும் மிரட்டல்களாலும் மேற்கொள்ளும்படியாய் அழைக்கப்படவில்லை. நீங்கள் பொறுமையோடு கூடிய நன்மையான கிரியைகளினாலும், தீமை செய்கின்றவர்களுக்காக ஏறெடுக்கப்படும் விண்ணப்ப ஜெபத்தினாலும் தீமைகளை மேற்கொள்ளுங்கள்.

**ரோமர் 12:21**

**நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு.**

**ஜெபம்**: இரக்கமுள்ள பிதாவே, நான் தீமையினால் வெல்லப்படாமல், தீமையை உம்முடைய திவ்விய குணாதிசயங்களினால் ஜெயிக்கும்படி ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இருதயத்தில் விசுவாசி

கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் என்று தேவன் உரைத்திருக்கிறார். தேவன் ஒருவர் இருக்கின்றார் என்று கூறிவிட்டு, தன்பாட்டிற்கு வாழ்பவன் அல்ல, அவரை விசுவாசித்து அவரை நோக்கி கூப்பிடுகின்றவனே இரட்சிக்கப்படுவான். இங்கே கூறப்படும் விசுவாசம் என்ன? தேவன் ஒருவர் உண்டென்று பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன. என் னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். கர்த்தராகிய இயேசுதாமே, தேவனுடைய ரூபமாக இருந்தும், தம்மை வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்தார், எங்கள் பாவங்களுக்காக பாடுகள் பட்டு, தம் தூய இரத்தத்தை சிந்தி, சிலுவையிலே மரித்து, மூன்றாம் நாள் உயிர்தெழுந்தார், பரலோகத்திற்கு எழுந்தருளி பிதாவின் வலது பாரிசத்திலே வீற்றிருக்கின்றார். அவர் தம்முடையவர்களை சேர்த்துக் கொள்ள மறுபடியும் வருவார என்றும், யாவருக்கும் நீதியான நியாயத்தீர்ப்பை வழங்குவார் என்றும் உன் **“இருதயத்திலே”** விசுவாசி. அந்த விசுவாசத்தை உன் வாயினாலே அறிக்கையிடு. அவரை விசுவாசித்தால், அவருடைய வார்த்தைகளின்படி, உன் வாழ்க்கையில் கிரியைகளை நடப்பி. நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது. யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை. அதாவது, நீ எந்த நாட்டவனாக இருந்தால் என்ன, எந்த குலத்தவனாக இருந்தால் என்ன, அவைகளை விட்டுவிட்டு உன் கர்த்தராகிய இயேசுவை தொழுதுகொள், கர்த்தரானவர், தம்மைத் தொழுது கொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரியசம்பன்னராயிருக்கிறார்.

**ரோமர் 10:9**

என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.

**ஜெபம்**: இரட்சிப்பின் தேவனே, எதிரிடையான சூழ்நிலைகளிலும் உம்மை கர்த்தரென்று அறிக்கை செய்து, விசுவாசமுள்ள இருதயத்தோடு நான் வாழும்படிக்கு எனக்கு அருள்புரிவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**வெள்ளி | ஆனி 7** 📖 மாலை வாசகம் – யோவான் 14:1

# நாளாந்த கிரியைகள்

ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அனுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, நீங்கள் அவர்களைப் பார்க்கும் போது மனதிலே இரக்கம் வருவது நல்லது. அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளைக் கூறுவது நல்லது. அதாவது, நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்களென்று அவர்களை வாயினாலே ஆசீர்வதிக்கலாம். ஆனால், அவர்கள் உங்களோடு பேசும் போது, பசியாய் இருக்கின்றார்கள். தகுந்த வஸ்திரமில்லாதிருக்கின்றார்கள். அதாவது, உங்கள் மனதுருக்கம் நல்லது, உங்கள் ஆறுதலான ஆசீர்வாதமான வார்த்தைகள் நல்லது ஆனால் அவர்களுடைய பசியை ஆற்ற “ஏதாவது” உணவை கொடுக்காவிட்டால் உங்கள் இரக்கமும், உங்கள் ஆறுதல் வார்த்தைகளும் கிரியை அற்றதாக இருக்கும். தகுந்த வஸ்திர மில்லாமல் உங்கள் முன்னிலையில் நிற்கின்றவனுக்கு நீங்கள் உங்களால் முடிந்த உதவியை செய்யாமல், மனதுருகி ஆறுதல் வார்த்தைகளை கூறுவதால் எந்த பிரயோஜனமும் இல்லை. அது போலவே, இயேசுவை விசுவாசித்தால், அவர் கூறிய வார்த்தைகளை விசுவாசிக்க வேண்டும். அந்த வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளுவதுடன் விட்டுவிட்டால், அங்கே கிரியை இருக்காது. எடுத்துக் காட்டாக, நான் இயேசுவின் பிள்ளை நான் நஷ்டம் வந்தாலும் பொய் பேச மாட்டேன் என்று அறிக்கையிடுவது நல்லது. இப்போது, அந்த அறிக்கை பரீட்சைக்கு வருகின்றது. ஒரு இக்கட்டான சூழ்நிலை, ஒரு சகோதரனுக்கு எதிராக அவதூறான காரியத்தை அறிந்தோ அறியாமலோ பேசிவிட்டீர்கள். ஆனால் அதை நிரூபிப்பதற்கு அந்த சகோதரனுக்கு தற்போது சாட்சிகள் இல்லை. வேதம் கூறுகின்றது, ஒரு குற்றம் இரண்டு அல்லது மூன்று சாட்சிகளால் உறுதி செய்யப்படும். இப்போது உங்கள் ஊழியர் இந்த காரியத்தை விசாரிக்கின்றார். இயே சுவை உண்மையான இருதயத்திலே விசுவாசிக்கின்றவன், சாட்சிகள் இருந்தாலும், இல்லாவிட்டாலும், தன் இருதயத்தை காண்கின்ற இயேசு முன்னிலையில் உண்மையை கூறி தன் குற்றத்தை ஏற்றுக் கொண்டு, கிரியைகளினாலே, மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளுவான்.

> **யாக்கோபு 2:22**
>
> விசுவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சிசெய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே.

**ஜெபம்:** அன்பின் பிதாவே, என்னுடைய அனுதின வாழ்க்கை வழியாக, என் இருதயத்தில் நான் செய்த விசுவாச அறிக்கையை உறுதி செய்யும்படி என்னை நீர் வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**சனி | ஆனி 8** | 📖 மாலை வாசகம் – 2 தீமோத்தேயு 4:2

# சுவிசேஷத்தை அறிவியுங்கள்

சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் சமாதானத்தின் சுவிசேஷத்தை நாங்கள் மற்றவர்களுக்கு வார்த்தையினாலும் கிரியைகளினாலும் அறிவிக்க வேண்டும். “கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்.” என பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. ஒருவன் இயேசுவை விசுவாசிக்காவிட்டால் எப்படி அவரைத் தொழுது கொள்ளுவான்? இயேசு யார் என்று அறியாதவன், எப்படி விசுவாசிக்க முடியும்? இயேசு யார் என்பதை அறிவிக்கின்றவன் (பிரசங்கிக்கிறவன்) இல்லாவிட்டால், எப்படி மற்றவர்கள் இயேசுவைப்பற்றி கேள்விப்படுவார்கள்? பிரசங்கிக்கின்றவர்கள் நற்செய்தியை கூறும்படி அனுப்பப்படாவிட்டால் எப்படி அவர்கள் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று பரிசுத்த வேதத்திலே எழுதியிருக்கிறதே. விசுவாசம் தேவனுடைய வார்த்தைகளை கேட்பதனால் உண்டாகின்றது, ஆனாலும் சுவிசேஷத்துக்கு எல்லாரும் கீழ்ப்படியவில்லை என்று வேதம் கூறுகின்ற பிரகாரம் சிலர் நீங்கள் கூறும் இயேசு கிறிஸ்துவின் மீட்பின் நற்செய்தியை ஏற்றுக் கொள்ள மறுப்பதால், நீங்கள் சோர்வடைந்து போய்விடாதிருங்கள். நீங்கள் நற்செய்தியை அறிவிக்கும்படி பிரத்தியேகமாக பிரித்தெடுக்கப்படாவிட்டாலும் (மிஷனரி ஊழியம்), உங்கள் நாளாந்த வாழ்க்கை வழியாக நீங்கள் கிறிஸ்துவை மற்றவர்களுக்கு வெளிப்படுத்த முடியும். “என்னை காணுவோர் உம்மை காணட்டும்” என்று அழகான பாடல்களை பாடுகின்றோம். மற்றவர்கள் இயேசுவை எங்களில் காணும்படியாய் எங்கள் வாழ்க்கை முறை நற்செய்தியாக மாற வேண்டும். தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள், தியானப் புத்தகங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். தேவனுடைய வார்த்தை வல்லமையுள்ளது. அவருடைய வார்த்தை ஜீவனுள்ளது. அந்த வார்த்தைகள் மனிதர்களை விடுதலையாக்கும். அதை உங்கள் இருதயத்தில் விசுவாசித்து, மற்றவர்களுக்கும் அறிவியுங்கள்.

**ரோமர் 10:15**

**சமாதானத்தைக்கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே.**

**ஜெபம்:** என்னை தெரிந்து கொண்ட தேவனே, வார்த்தைகள் வழியாகவும், கிரியைகள் வழியாகவும், உம்முடைய நற்செய்தியை மற்றவர்களுக்கு கூறும்படி என்னை பெலப்படுத்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நல் நடக்கை

மேற்கத்தைய நாடுகள் ஒன்றிலே, ஞாயிறு காலையிலே, அதி வேக மாக செல்லும் வாகனம் ஒன்றை பொலிசார் இடைமறித்தார்கள். போடப்பட்ட வேக எல்லையை தாண்டி அதிவேகமாக வாகனத்தை செலுத்தும் காரணம் என்ன என்று பொலிசார், சாரதியிடம் கேட்டார்கள் சாரதி: நான் ஆலயத்திற்கு செல்கின்றேன், அங்கு எனக்கு சில பொறுப்புக்கள் உண்டு, இன்று தாமத மாகிவிட்டதால், வேகமாக செல்கின் றேன் என்று மறுமொழி கூறினார். முன் னுதாரணமாக இருக்க வேண்டிய உம் மைப் போன்றவருக்கு நிச்சயமாக தண் டனை வழங்க வேண்டும் என பொலி சார், சாரதியிடம் கூறினார். அந்தச் சாரதியோ சபையின் மூப்பனாக இரு ந்தார். தான் தாழ்மையோடும், தன் கிரியையின் நிமித்தம் மனவருத்தத்தோடும், தன் குற்றத்தை ஏற்றுக் கொண்டேன் என்று தன் அனுபவத்தை மற்றய விசுவாசிகளுடன் பகிர்ந்து கொண்டார். அன்று காலையிலே, பொலிசாரின் சொற்கள் தேவனுடைய பிள்ளையின் மனக்கண்களை திறந்து விட்டது. தேவனுடைய நியமங்களுக்கு முரண்படாத, எல்லா நாட்டுச் சட்டங்களுக்கும் நாங்கள் கீழ்ப்படிந்து, மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக வாழ்க்கையை வாழ வேண்டும். (ரோமர் 13:1-7). மேற்குறிப்பிடப்பட்ட உதாரணத்தைப் போல, எங்கள் நாளாந்த வாழ்க்கையிலே பலவிதமான சூழ்நிலைகளை நாங்கள் எதிர்நோக்குகின்றோம். நாங்கள் என்னத்தை பிரசங்கிக்கின்றோம் பின்பு என்னத்தை வாழ்க்கையில் நடப்பிக்கின்றோம் என்று பலர் எங்களை நோக்கிப் பார்க்கின்றார்கள். ஆலயத்திலே மட்டுமல்ல, நாங்கள் வேலை செய்யும் இடங்கள், கல்வி கற்கும் இடங்கள், வெளி இடங்கள், விழாக்கள், மற்றும் ஒன்றுகூடல் போன்ற வாழ்க்கையின் நிகழ்வுகளில் நாங்கள் எங்கள் சாட்சியையை காத்துக் கொள்ள வேண்டும். எங்கள் நடக்கைகளின் நிமித்தம் தேவனுடைய நாமம் தூஷிக்கப்படாமலும், எங்களை நோக்கிப் பார்க்கும் சிறார்கள் முன்னிலையிலும் நாங்கள் நற்சாட்சியான வாழ்க்கை வாழ வேண்டும். அத்துடன் கீழ்ப்படியும் மனநிலை உடையவர்களாகவும் வாழவேண்டும். கிறிஸ்துவில் இருந்த மனத்தாழ்மையும் சாந்தமும் எங்களிலும் வெளிப்பட வேண்டும்.

**1 பேதுரு 2:12**

**நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள்**

**ஜெபம்**: அன்பின் பரலோக தேவனே, என் நிமித்தமாக, மற்றவர்கள் மத்தியிலே, உம்முடைய நாமம் எந்த விதத்திலும், தூஷிக்கப்படாதபடிக்கு என் நடக்கையை காத்துக் கொள்ள என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எனக்கு பிறன் யார்?

யூத மதத் தலைவர்களில் ஒருவனாகிய நியாயசாஸ்திரி "எனக்குப் பிறன் யார்" என்று இயேசுவிடம் கேட்டான். அந்த வேளையிலே, இன்று நாங்கள் "நல்ல சமாரியன்" என்று அழைக்கும் உவமையை இயேசு கூறினார். ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிக்கோவுக்குப் போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான். அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்துகொண்டு அவனைக் காயப்படுத்தி, குற்றுயிராக விட்டுப் போனார்கள். அப்பொழுது தற்செயலாய் ஒரு ஆசாரியன் அந்த வழியே வந்து, அவனைக்கண்டு, பக்கமாய் விலகிப்போனான். அந்தப்படியே ஒரு லேவியனும் அந்த இடத்துக்கு வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப் போனான். அந்த ஆசாரியனும் லேவியனும் விலகிப்போனதற்குரிய தங்கள் நியாயங்களை கூறிக் கொள்வார்கள். அந்த வழியிலே வந்த சமாரியன், குற்றுயிராக இருக்கும் மனுஷனைக் கண்டதும் மனதுருகினான். அந்த மனிதன், எவ்விடத்தான்? ஏன் எரிக்கோவிற்கு போக பிரயாணப்பட்டான்? அவன் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்தான்? யார் அவனை அடித்தார்கள்? எதற்காக அடித்தார்கள்? இதனால் நான் பிரச்சனைக்குள் மாட்டிவிடுவேனோ? இவையொன்றையும் குறித்து அவன் சிந்திக்கவில்லை, மாறாக அந்த மனிதனுடைய நிலையை கண்டவுடனே மனதுருகினான். சமாரியனுடைய சமுதாய அந்தஸ்தோ அல்லது அவன் சென்று கொண்டிருந்த பிரயாணத்தின் நோக்கமோ, கள்வர்களால் தனக்கும் நஷ்டம் வரலாம் என்ற பயமோ எந்த சூழ்நிலையாலும் அந்த சமாரியனை தடுக்க முடியவில்லை. பிரியமானவர்களே, இன்று நாங்கள் எங்கள் அயலவர்களை பலவிதமான இக்கட்டுகளில் காணும் போது எங்கள் மனதில் தோன்றும் சிந்தை என்ன? இந்த உலகத்தைவிட்டு முற்றும் பிரிந்திருக்கும்படி நாங்கள் அழைக்கப்படவில்லை. இந்த உலகத்திற்கு வெளிச்சமாக இருக்கும்படி, பூமிக்கு உப்பாக இருக்கும்படி அழைக்கப்பட்டோம். குற்றுயிராய் கிடந்த மனிதனுக்கு உதவுவதற்கு, அந்த சமாரியன், தன் சட்டப்புத்தகத்தை தட்டிப் பார்க்கவில்லை. அதே போல தேவனாகிய கர்த்தருடைய பிள்ளைகளாக அழைக்கப்பட்ட நாங்களும், பிறருடைய இக்கட்டான சூழ்நிலையில் நீதி நியாயங்களையும், அவர்களுடைய வாழ்க்கை முறையையும் குறித்து விமர்சிக்காமல் உதவி செய்வோமாக.

**லூக்கா 10:29**

எனக்குப் பிறன் யார் என்று கேட்டான்.

**ஜெபம்**: மனதுருகும் தேவனே, உம்முடைய கிருபையின்படி எனக்கு மனதுருகுகின்றீர். அதே போல நானும் மற்றவர்களின் இடுக்கண் நேரங்களிலே அவர்களுக்கு இரக்கங்காட்ட உணர்வுள்ள இருதயத்தைத் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தருணம் இதுவே

சில மனிதர்கள், பிறருக்கு உதவி செய்யும்படி, தங்கள் வாழ்க்கையில் சரியான தருணம் (Perfect timing) வர வேண்டும் என்ற மனநிலையுடையவர்களாக இருக்கின்றார்கள். அதாவது எனக்கு நேரம் இருக்க வேண்டும். நான் மற்ற அலுவல்களில் ஈடுபடாமல் இருக்கும் நேரமாக இருக்க வேண்டும். நான் உதவி செய்யும் மனிதன், இன்ன பிரகாரமான வாழ்க்கை வாழ்திருக்க வேண்டும். அவன் இவ்வண்ணமாக அடிபட்டு குற்றுயிராக இருக்க வேண்டும். எனக்கு சகலமும் சம்பூரணமாக இருக்கும் வேளையாக இருக்க வேண்டும். அப்படியிருக்கும் போதுதான் நான் அயலவனுக்கு உதவி செய்வேன் என்று சிந்திக்கும் மனிதர்களின் மனநிலை தவறானது. அதாவது, மற்றவர்களுக்கு உதவி செய்யும் எண்ணம், எங்கள் பொருளாதர நிலையை பற்றியதல்ல, எங்கள் மனநிலையை பற்றியது. இருள் சூழ்ந்திருக்கும் இந்த உலகிலே, எங்கள் அயலவர்கள் பலர், பாவ இருளிலே அகப்பட்டிருக்கின்றார்கள். அவர்களில் பலர், தாங்கள் பாவ கட்டுக்களிலே இருக்கும் நிலையைக் கூட உணரமுடியமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். வெளியரங்கமாக, குடி, மதுபோதை, போதைவஸ்து போன்ற பல கட்டுகளில் விடுதலையடைய முடியாமல் வாழ்கின்றார்கள். இருதயத்தில் குடி கொண்டிருக்கும், வன்மம், பகை, கசப்பு மற்றும் மோக பாவ கட்டுகளில் அகப்பட்டிருப்போரும் பலர். பிரியமானவர்களே, சற்று, தரித்திருந்து, உங்களை சுற்றியுள்ளவர்களின் நிலையை கிருபையின் கண்கள் வழியாகப் பாருங்கள். எத்தனையோ ஆத்துமாக்கள், பாதாளத்தை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது. ஒருவரும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்பதே எங்கள் தேவனாகிய கர்த்தருடைய அநாதித் தீர்மானம். நாங்கள் அறிந்த யாவருக்கும் எங்களால் உதவி செய்ய முடியாவிட்டாலும், ஒரு சிலருக்காவது நாங்கள் உதவி செய்யக்கூடிய பல சந்தர்ப்பங்கள் உண்டு. அவைகளை சிந்தித்துப் பாருங்கள். பெரிய காரியங்கள் அல்ல, சிறிதாக ஆரம்பியுங்கள். சிறிய விதை வளர்ந்து பெரிய விருட்சமாக மாறுவது போல, நீங்கள் ஒருவருக்கு செய்யும் சிறிய உதவி, ஆண்டுகள் கடந்து செல்லும் போது அதிக பலனைக் கொடுக்கும்.

**நீதிமொழிகள் 3:27**

**நன்மைசெய்யும்படி உனக்குத் திராணியிருக்கும்போது, அதை செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே**

**ஜெபம்:** கருணை நிறைந்த தேவனே, காலத்தை வீணாக்காமல், ஆதாயப்படுத்திக் கொள்ளத்தக்கதாக, நன்மை செய்யும் மனநிலையை எனக்கு தந்து உம்முடைய வழியிலே நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மேலான சாட்சி

அந்த மனிதனைப் பாருங்கள்! எவ்வளவு ஐசுவரிய செழிப்புடன் வாழ் கின்றான் அவனிடத்திலிருப்பதில் கொஞ்சமாவது எனக்கு இருந்தால் எவ்வளவு நன்மைகளை செய்வேன் என்று சில மனிதர்கள் கூறுவ தைக் கேட்டிருக்கின்றோம். ஆனால், தேவ ஊழியராகிய பவுல் தன் னுடைய மரணம்வரை கிறிஸ்துவின் நற்செய்திக்காகவே அநேக பாடுக ளையும், உபத்திரவங்களையும் சகித்தார், அதில் கொஞ்சம் என்றா லும் நான் கிறிஸ்துவின் நற்செய்தி க்காக செய்ய வேண்டும் என்று கூறு வதற்கு மனிதர்கள் தயக்கமடைகின் றார்கள். நாங்கள் எங்களுக்கு முன் இருக்கும் சாட்சிகளை எவ்வண்ணமாக பார்க்கின்றோம் என்பதைக் குறித்து ஆராய்ந்து பார்க்க வேண்டும். கிறிஸ் தவ வாழ்க்கையிலே எங்களுக்கு நிய மிக்கப்பட்ட சேவை உண்டு. நல்ல மேய்ப்பனாகிய இயேசு தம்மு டைய மந்தைகளாகிய எங்கள் நிலைமைகளை அறிந்தவர். கறவலாடு களை மெதுவாகவும், குட்டிகளை தன் தோள்களின் மேலும் தூக்கிச் சுமக்கின்றவர். அவனவனுடைய திராணிக்கு மேலாக ஒருவனையும் சோதிக்காத தேவனவர். பாடுகளை சகிக்கத்தக்கதான பெலனையும் தம்முடையவர்களுக்கு அருள்கின்றார். ஆகவே தேவனுடைய சித்தத்தி ன்படி அவரவர் வாழ்க்கையில், சேவையும், அதனோடு வரும் பாடு களும் இருக்கின்றது. ஒரு வேளை, அப்போஸ்தலராகிய பவுல் அனு பவித்த பாடுகளைப் போன்ற பாடுகள் எங்களுக்கு இல்லாதிருக்க லாம். “பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப் படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே” என்று பரிசுத்த வேதாகமத்திலே வாசிக்கின்றோம். ஆனால், கிறிஸ்துவின் நற்செய்திக்காக எதையும் சகிப்பேன் என்ற தேவ ஊழியராகிய பவுலு க்கிருந்த மனநிலை எங்களுக்கு இருக்க வேண்டும். கிறிஸ்து இந்த உலகத்திலே தோன்றுமுன் வாழ்ந்த முன்னோடிகளாகிய தேவனுடைய தாசர்கள், தங்களுக்கு முன்பிருந்த தேவ மனிதர்களுடைய வாழ்க் கையின் சாட்சிகளை முன்வைத்து பரிசுத்த வாழ்க்கையை வாழ்ந் தார்கள். நாங்களோ அவர்களிலும் பாக்கியம் பெற்றவர்கள். கிருபை யின் நாட்களில் வாழும் எங்களுக்கு, தேவ மைந்தனாகிய இயேசு வின் இப்பூவுலக வாழ்க்கை சாட்சியாக இருக்கின்றது.

**எபிரெயர் 12:1**

**விசுவாசத்தைத் துவக்கு கிறவரும் முடிக்கிறவரு மாயிருக்கிற இயேசுவை நோக்கி**,

**ஜெபம்**: அன்பின் பிதாவே, பரலோகத்திலே எங்களுக்கு வைக்கப்பட்டிருக் கின்ற மேன்மையை உணர்ந்து, எனக்கு வைக்கப்பட்டிருக்கின்ற சேவையை செய்து முடிக்க என்னை பெலப்படுத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

வியாழன் | ஆனி 13 | 📖 மாலை வாசகம் – உபாகமம் 8:2

# வாழ்வு தரும் தெய்வம்...

தன் நிலையை அறியாத மனிதன் பரிதவிக்கப்படத்தக்கவன். அதாவது, பாவம் ஒரு மனிதனில் குடி கொண்டிருக்க, அவன் அந்த பாவத்தை உணராது, தன்னை பரிசுத்தன் என்று சொல்லிக் கொள் வான், அவன் தன் வாழ்க்கையை மாற்றி அமைக்காவிட்டால் அவனுக்கு மனந் திரும்ப வேண்டும் என்ற உணர்வு ஏற்படப் போவதில்லை. இதனால் மனிதர்கள் தங்கள் இருதயங்களை கடினப்படுத்திக் கொள்கின்றார்கள். மீட்பராகிய இயேசு இந்த உலகத்திலே இருந்த நாட்களிலே இருந்த யூத மதத் தலைவர்கள் கூட மீட்பரின் வரவிற்காக காத்திருந்தார்கள். வேதத்தை முறைப்படி கற்று, வேத வாக்கியங்களை அறிந்திருந்தும், தங்கள் நிலையை உணராமல், தங்கள் இருதயத்தை கடினப்படுத்தியதால், மீட்பராகிய இயேசு வந்த போது, அவரை அறிய முடியாமல் போய்விட்டார்கள். சில வேளைகளிலே, மனிதர் கொள்கைவாதிகளாக மாறிவிடுவதால் உண்மையை அறிந்தாலும், உண்மையை விட தங்கள் கொள்கைகளே மேலானது என தங்கள் இருதயத்திலே நிச்சயித்திருப்பதால் தங்கள் மனக் கண்களை குருடுபடுத்தி விடுகின்றார்கள். அதாவது, நான் சொல்வதும் செய்வதும் தேவனுடைய பார்வையில் சரியாக இருக்கின்றதா என்பதை ஆராய்ந்து அறிய இடங் கொடுப்பதில்லை. யாரும் அதை சுட்டிக் காட்டினாலும், அதை ஏற்றுக் கொள்வதில்லை. “இது எங்கள் கொள்கை, இப்படித்தான் காரியங்களை செய்து வந்தோம், இனியும் இப்படித்தான் செய்து கொள்வோம்” என்று தங்கள் நிலையை மாற்றிக் கொள்ள மறுக்கின்றார்கள். மீட்பரை எதிர்பார்த்திருந்தவர்களுக்கு மீட்பரை அறியமுடியவில்லை. அவர்கள் மீட்பராகிய இயேசுவை சிலுவையில் அறையும்படி வேண்டிக் கொண்டார்கள். அவரை சிலுவையில் அறைய பணிப்புரைபெற்ற ரோம வீரர்களின் தலைவன், இயேசுவை சில மணித்தியாலங்கள் மாத்திரமே கண்டான். ஆனால், அந்நியனாகிய அவன், குறிப்பிட்ட மணித்தியாலங்களுக்குள் நடந்த சம்பவங்களை கண்டு மெய்யாகவே இயேசு நீதிபரராயிருந்தார் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினான். பிரியமானவர்களே, நாங்கள் எங்கள் வழிகளில் நடந்தால், கொள்கைவாதிகளாகிவிடுவோம். எனவே எப்போதும், தேவனுடைய வழிகளில் நடக்கத்தக்கதாக அவருடைய வார்த்தைகளை இருதயத்தில் பதித்து வைப்போம்.

**நீதிமொழிகள் 14:12**

**மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு அதின் முடிவோ மரண வழிகள்.**

**ஜெபம்:** சகலமும் அறிந்த தேவனே, என் இருதயத்திலுள்ளதை நான் அறிந்து, உமக்கு வேதனை உண்டாக்கும் வழிகளிலிருந்து விலகி நடக்க என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

வெள்ளி | ஆனி 14

📖 மாலை வாசகம் – யாத்திராகமம் 15:3

# சேனைகளின் கர்த்தர் நம் தேவன்

தண்டில் சேவகம்பண்ணுகிற எந்தப் போர்வீரனும், சேவகம் எழுதிக் கொண்ட தேசத்தின் கொடியின் கீழே கிரியை நடப்பிப்பான். அவனு க்கென்று ஒரு கீதம் இருக்கும். அவனுக்கு என்று ஒரு பட்டாளம் இருக்கும். அவனுக்கு என்று ஒரு சீருடை இருக்கும். அவனுக்கென்று சில பயிற்சிகளும் ஒழுக்க நெறிகளும் உண்டு. அவனுக்கென்று சில ஆயுதங்கள் உண்டு. அந்த போர்வீரர்க ளுக்கென்று ஒரு தலைவன் இருப் பான். சில வேளைகளிலே அவர்கள் தங்கள் தேசத்திற்காக உயிரை பண யம் வைத்து போராடுவார்கள். நாங் கள் யாவரும் சேனைகளின் கர்த்தரா கிய கிறிஸ்துவின் கொடியின் கீழே சேவகம் எழுதப்பட்டிருக்கின்றோம். எமது தலைவன் மனிதர்களுடைய முறைமையின்படியல்ல, தேவனுடைய முறைமையின்படி ஏற்படுத்தப்பட்டவர். மனித முறைமையின்படி, போர்வீரர் கள் தங்கள் தலைவனுடைய உயிரைக் காக்க, தங்கள் உயிரைத் தியாகம் செய்து போராட பயிற்றுவிக்கப்பட்டவர்கள் ஆனால் இவரோ, தலைவர்களுக்கும் தலைவனாக இருந்தும், தம்முடைய சேனையின் வீரர்களை மீட்கும்படிக்கு, தன் உயிரையே பலியாகக் கொடுத்தார். இவர் பயிற்றுவிக்கப்பட்டவர் அல்ல. இவர் சர்வ வல்லவர் ஆனால் தம் சேனை வீரர்களின் மேல் வைத்த அன்பின் நிமித்தம் பூமியின் தாழ்விடங்களுக்கு இறங்கி வந்தார். இரட்சிப்பென்னும் வஸ்திரத்தை எங்களுக்குத் தந்தார். தம்முடைய சர்வாயுதவர்க்கத்தை எங்களுக்குத் தந்தார். அவரே எங்கள் கீதம். அவரே எங்கள் சேனைகளின் தலைவன். சகல அதிகாரங்களும் அவருக்கு கீழ்ப்பட்டிருக்கின்றது. மனிதகுலம் மீட்படைவதற்கு இயேசுவின் நாமம் அல்லாமல் வேறொரு நாமும் இல்லை. அவருக்குள் நாங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிரு க்கின்றோம். இந்த உலகிலே சூழ்நிலைகள் சாதகமாக இருந்தாலும் அல்லது பாதகமாக இருந்தாலும், உயர்வானாலும் தாழ்வானாலும், அவருக்குள் நாங்கள் திருப்தியடைகின்றோம். கர்த்தரே யுத்தத்தில் வல்லவர் கர்த்தர் என்பது அவருடைய நாமம். சத்துருவானவன், தம் முடையவர்களுக்கு எதிராக வரும் போது, அவர் வெற்றிக்கொடி ஏற் றுவார்.

**கொலோசெயர் 2:10**

**மேலும் சகல துரைத்த னங்களுக்கும் அதிகாரத் துக்கும் தலைவராயிருக் கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களா யிருக்கிறீர்கள்.**

**ஜெபம்:** சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய ஜீவ சேனையின் போர்வீரர்களாகிய நாம் பாக்கியம் பெற்றவர்கள். அந்த உண் மையை உணர்ந்து கொள்ளும்படியான மனக்கண்களைத் தாரும். இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிருபையின் காலம்

தன் மகனின் கையில் ஏற்பட்ட சிறிய வெட்டுக் காயம், உயிர் ஆபத்திற்கு ஏதுவல்லாதது என்பதை அறிந்த போதும் அவன் தாயார் கலக்கம் அடைந்தாள். வைத்திய சாலையின் அவசர சிகிச்சை பிரிவில், அநேகர் இருந்தபோதும், அவளுடைய எண்ணமெல்லாம், என் மகனுக்கு காலதாமதமின்றி சிகிச்சை நடைபெறவேண்டும் என்பதாக இருந்தது. அவளுடைய பதற்றம் அந்த சிகிச்சை நிலையத்திலுள்ள யாவருக்கும் தெளிவாக தெரிந்தது. அவள் சிகிச்சையை முடித்து அறையிலிருந்து வெளியே வரும் போது, கடும் ஆஸ்துமா வியாதியினால் உயிருக்காக போராடிக் கொண்டிருக்கும் சிறு பையனின் தாயாரின் கண்ணீரைக் கண்டாள். இப்போது இவள் பதற்றம் எல்லாம் அகன்று, மற்றய பையன், உயிருக்காக போராடிக் கொண்டிருக்கின்றானே, ஆனால் நான் இந்த சின்ன விஷயத்திற்காக மிகவும் சுயநலமாக இருந்தேன் என்று மனவருத்தம் அடைந்தாள். சில வேளைகளிலே மனிதர்கள், ஆரோக்கியத்தைப் பற்றி பேசும் போது, தங்களுக்கு நோய் இருக்கின்றது என கூறிக் கொள்வார்கள். அப்படி கூறுபவர்களில் பலர், கடும் நோயின் தாக்கத்தை அறியாமலும், தங்கள் உயிருக்காக போராடிக் கொண்டிருக்கும் பல நோயாளர்களின் வேதனையையும் அறியாதிருக்கின்றார்கள். எங்கள் நாட்டில் குழப்ப ங்கள் இருக்கின்றது என்று கூறும் சிலர், உண்மையான யுத்தம் என்றால் என்ன? அகதியாய் இருப்பது என்றால் என்ன? யுத்தத்தின் பாதிப்பென்றால் என்ன? என்று அறியாமலிருக்கின்றார்கள். இதே போல எங்களுக்கு கஷ்டம் என்று கூறும் சிலர், உண்மையான வறுமை என்றால் என்ன என்பதை உணராமல் இருக்கின்றார்கள். பிரியமானவர்களே, எந்த கடினமான சூழ்நிலையும் கிறிஸ்துவைச் சார்ந்து வாழ்பவர்களை மேற்கொள்ள முடியாது என்று வேதத்தில் காணும் பாத்திரங்கள் வழியாக அறிகின்றோம். இன்று பல நாடுகளிலே கர்த்தரின் பணிக்காக திறந்த வாசல் உண்டு. அந்த நாடுகளிலே ஏற்படும் சில எதிர்ப்புக்களையும், ஏளனங்களையும் கண்டு, சோர்ந்து போய், தேவ பணி செய்வத ற்கு இன்று சூழ்நிலைகள் கடினமாக இருக்கின்றது என நாங்கள் கூறுவோமாக இருந்தால், இருளின் நாட்கள் வரும் போது என்ன கூறுவோம்? எனவே இக் கிருபையின் நாட் களை ஆதாயப்படுத்திக் கொள்வோம்.

**எபேசியர் 5:16**

நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப்பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்.

**ஜெபம்**: அன்பின் தேவனே, சவால்களை கண்டு பயந்து, கிருபையின் நாட்களை விரையப்படுத்தாதபடி, நாட்களை பிரயோஜனப்படுத்திக் கொள்ளத்தக்கதாக என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எல்லாம் கிருபையே

நிறைவான வாழ்க்கை வாழும் குடும்பத்தவர்கள், பல பிரச்சனைகளோடு இருக்கும் சக விசுவாசிகளை காணும் போது ஏன் இப்படி செய்கின்றீர்களென்று சில புத்திமதிகளை கூறிக் கொள்வார்கள். வேறு சிலர், இவர்கள் ஏதோ பாவம் செய்கின்றார்கள் என பேசிக் கொள்வார்கள், இன்னும் சிலர், அவர்களுக்கு உதவ வேண்டும், அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்வார்கள். நாங்கள் பல நெருக்கடிகளோடு வாழ்ந்து வரும் சக விசுவாசிகளை கண்டால் என்ன சொல்லுவோம்? சற்று சிந்தித்துப் பாருங்கள். இன்று என் வாழ்க்கை சுமுகமாக ஓடிக் கொண்டிருக்கின்றது என்றும் என்னுடைய வாழ்க்கையில் ஒழுக்கம் இருக்கின்றது. சோம்பல்தனமில்லாமல் கடுமையாக பிரயாசப்பட்டு வருகின்றேன், தினமும் வேத த்தை வாசித்து ஜெபித்து வருவதில் தவறுவதில்லை, என்னுடைய குடும்பத்தினர் யாவரோடும் ஒற்றுமையாக ஆலயம் சென்று வருகின்றேன். பிள்ளைகள் படிக்கும்படி ஊக்குவித்து உதவி செய்கின்றேன். நல்ல வேலை பார்க்கின்றேன். இப்படியாக நாம்சொல்லிக் கொள்ளலாம். பிரியமானவர்களே, இப்படி உங்கள் வாழ்க்கை ஆசீர்வாதமாக ஓடிக் கொண்டிருந்தால், அதைக் குறித்து மேன்மை பாராட்ட எங்களுக்கு இடமில்லை. தேவ கிருபையினாலே இவை யாவும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. நற்கிரியைகளை செய்வதற்குரிய எண்ணத்தையும், அதன் ஆற்றலையும் தேவனே உங்களுக்கு அனுக்கிரகம் செய்கின்றார். நான் நிற்பதும் நிர்மூலமாகதிருப்பதும் தேவனுடைய சுத்த கிருபை. இந்தக் கண்களினூடாகவே நாங்கள் மற்றவர்கள் யாவரையும் பார்க்க வேண்டும். தேவ ஊழியராகிய பவுலின் வாழ்க்கையிலே தேவ கிருபை கொடுக்கப்பட்டது. அந்த கிருபை அநியாயமாக போகாதபடிக்கு அவர் அதிகமாக பிரயாசப்பட்டார். அவருடைய கடும் பிரயாசங்கள் மத்தியில் தேவ கிருபை அவருக்கு போதுமானதாக இருந்தது.

**1 கொரிந்தியர் 15:10**

ஆகிலும் நான் இருக்கிறது தேவகிருபையினாலே இருக்கிறேன் அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன், ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவ கிருபையே அப்படிச் செய்தது.

**ஜெபம்**: பரலோக தேவனே, நான் நிற்பதும் நிர்மூலமாகதிருப்பதும் தேவ கிருபையே என்பதை முழுமையாக உணர்ந்து, அக் கிருபை என் வாழ்வில் பிரயோஜனமாயிருக்கும்படி என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கொடுக்கப்பட்ட அளவின்படி

ஒரு பட்டணத்தில் வாழ்ந்து வந்த இரு மனிதர்களில் ஒருவன் கோடீஸ்வரனாக இருந்தான். மற்றய மனிதன் தன் நாளாந்த பிழைப்புக்கு கொஞ்சம் அதிகமாக உழைத்து வந்தான். ஐசுவரியவனான அந்த மனிதன், வருடாந்தம் தனக்குண்டான மிகையான ஐசுவரியம் யாவையும் கணக்குப் பார்த்து அதற்குரிய வரியை உள்நாட்டு வரி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியதாயிருந்தது. மற்றய மனிதனோ, தனக்குண்டான குறைந்த செல்வத்திற்கே கணக்குப்பார்க்க வேண்டியதாயிருந்தது. அவனவன் தனக்கு உண்டான ஐசுவரியத்திற்கு அதிகமாக அவனவன் கணக்குப் பார்க்கத் தேவையில்லை. ஒரு நாள் ஒன்று உண்டு, நாங்கள் யாவரும் எங்கள் வாழ்க்கையைக் குறித்து சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும். அவனவனுக்கு கொடுக்கப்பட்ட அளவின்படி அவனவன் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். இன்று எங்கள் வாழ்க்கை ஐசுவரியத்தினால் நிறைந்திருந்தால், அவை சுய நலமான சுகபோக வாழ்க்கைக்கு கொடுக்கப்படவில்லை. எங்கள் வாழ்க்கை இன்று சமாதானமாக இருந்தால், அதைக் குறித்து பெருமைப்பட்டு, பிரச்சனைகளோடு வாழும் மனிதர்களை நியாயந்தீர்க்கும்படி கொடுக்கப்படவில்லை. இன்று எங்கள் வாழ்வில் அதிக நேரம் இருந்தால், உல்லாசமான பயணங்களை மேற்கொள்வதற்கும், களியாட்டங்களுக்காகவும் கொடுக்கப்படவில்லை. சற்று சிந்தியுங்கள். மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று இயேசு கூறியிருக்கின்றார். எனவே நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் வாழ்க்கையின் நிலையை நன்கு ஆராய்ந்து பார்க்க வேண்டும். எங்கள் வாழ்நாட்களையும், எங்களுக்கு கொடுக்கப்பட்ட ஐசுவரியத்தையும், நேரத்தையும், வாழ்க்கையையும், கொடுக்கப்பட்ட அளவின்படி, ஞானமாக பயன்படுத்துவோம். எங்கள் வாழ்க்கையின் கிரியைகளை மற்றவர்கள் கண்டு, அவர்கள், எங்கள் நிமித்தம் பிதாவாகிய தேவனை மகிமைப்படுத்த வேண்டும்.

**லூக்கா 12:48**

எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும் மனுஷர் எவனிடத்தில் அதிகமாய் ஒப்புவிக்கிறார்களோ அவனிடத்தில் அதிகமாய்க் கேட்பார்கள்.

**ஜெபம்:** என் தேவனாகிய கர்த்தாவே, எனக்கு கொடுக்கப்பட்ட ஈவின் அளவை உணர்ந்து, அதன்படி வாழ பிரகாசமுள்ள மனக்கண்களை எனக்குத் தந்து, உம்முடைய பாதையில் வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தீமையை விட்டு விலகுங்கள்

பெருந்தெருவைக் கடக்கும்படி, பாதசாரியாருக்குரிய சமிஞ்ஞை விளக்கு வரும்வரை காத்திருந்த ஒருவர். அந்த சமிக்ஞை வந்தபின்பும், ஒரு சாரதி வாகனத்தை மிக வேகமாக ஓட்டிக் கொண்டு வந்ததை கண்டபோது, சற்று தரித்திருந்து, அந்த வாகனம் சென்ற பின்பு, பெருந்தெருவை பாதுகாப்பாக கடந்து கொண்டார். இப்படியான சூழ்நிலையிலே, சில மனிதர்கள், நாட்டுச் சட்டங்களையும், தங்களது உரிமையையும் குறித்து விவாதிப்பார்கள். இது பாதசாரிகள் தெருவைக் கடக்கும் நேரம், எனக்கு உரிமை உண்டு, தவறுபவர்களுக்கு எதிராக நான் வழக்கு தொடுப்பேன் என்று துணிவுடன் பெருந்தெருவை கடக்கத் துணிவார்கள். உரிமையும் நாட்டு சட்டமும் உங்கள் சார்பில் இருந்தாலும், நீஙகள் உயிரோடு இருந்தால் மாத்திரமே வழக்கு தொடுக்கலாம் மேலும் உங்கள் உடலில் ஏற்படும் பாதிப்பை எந்த வழக்கும், பணமும் மீளக் கொடுக்க முடியாது. எனவே, தீமைக்கு எதிர்த்து நின்று மதியீனமான காரியங்களை நாங்கள் செய்யக் கூடாது. நீங்கள் ஒரு வகுப்பின் ஆசிரியராக இருந்தால், மாணவர்கள் யாவரும் உங்களுக்கு கீழ்ப்படிய வேண்டும் என்பது பொதுவான சட்டம். ஆனால் ஒரு மாணவன் அதை மீறி முரட்டுத்தனமான காரியங்களை செய்ய முடியும். ஒரு காரியாலயத்தில் நீங்கள் மேற்பார்வையாளராக இருந்தால், உங்களுக்கு கீழ் வேலை பார்க்கும் ஊழியர்களில் ஒரு சிலர் காரியாலயத்தின் சட்டங்களுக்கு கீழ்ப்படியாதிருப்பதைக் காணலாம். அவர்கள் தங்கள் வேலை பறிபோவதைக் குறித்தும் பொருட்படுத்துவதில்லை. இதே போல, எங்களில் யாவரும் தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கின்றவர்கள் அல்லர். நாங் கள் கூடி வரும் இடங்களிலும் (குடும்பம், பாடசாலை, சபை, வெளி இடங்கள்) இத்தகைய மனிதர்கள் இருக்கலாம். எனவே, இத்தகைய மனிதர்களோடு முரண்டு பிடிக்காதிருங்கள், சட்டங்களையும், ஒழுங்கு முறைகளையும் ஒரு பொருட்டாக எண்ணாத மனிதர்களோடு விவாதத்திற்கு செல்லாதிருங்கள். எல்லா சூழ்நிலைகளிலும், மனிதர்களிடம் இருந்து வெளிப்படும் கனிகளை நிதானித்தறிந்து நலமானதைப் பற்றிக் கொள்ளுங்கள். உன் கால் நடையைச் சீர்தூக்கிப்பார் உன் வழிகளெல்லாம் நிலைவரப்பட்டிருப்பதாக. வலதுபுறமாவது இடதுபுறமாவது சாயாதே. உன் காலைத் தீமைக்கு விலக்குவாயாக.

**1 தெச 5:22**

பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்.

**ஜெபம்**: நீதியின் தேவனே, நீதியைவிட்டு விலகி, தங்கள் வாழ்க்கையை அநீதிக்கு ஒப்புக் கொடுத்திருக்கின்றவர்களுடன் தர்க்கிக்காமல், அவர்களை விட்டு விலகும்படி வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# போதுமானவர்!

நீ எப்படியாவது, கணிதபாடத்தின் இறுதிப் பரீட்சையில், அயலில் வசிக்கும் உன் வகுப்பு மாணவனைவிட அதிக புள்ளிகளை எடுக்க வேண்டும். அப்படி நீ எடுக்காவிட்டால், எங்கள் குடும்பத்திற்கு அவ மானம் என்று ஒரு மனிதன் தன் மகனிடம் கூறினான். அதாவது, தன்னுடைய மகன் சிறப்பாக படித்து பாடசாலையில் அதி விசேட சித்தி பெற வேண்டும் என்பதல்ல, எப் படியாவது, அயலிலுள்ள மாணவனை விட அதிகமான புள்ளிகளை எடுக்க வேண்டும் என்பதே அந்த தந்தையா ரின் ஏக்கம். இது நெறிமுறையான போட்டி அல்ல, இது குடும்ப பெரு மையை குறித்தது. இது பொறாமை நிறைந்த நோக்கம். இன்று உலகிலே சில மனிதர்கள் போட்டி மனப்பான்மையுடன் தங்கள் வாழ்க்கையை வாழ்கின்றார்கள். அதாவது எங்கள் வாழ்க்கையின் நோக்கம் என்ன? எங்கள் வாழ்க்கையின் தேவை என்ன என்பதை பற்றியதல்ல, மாறாக, நாங்கள் எங்கள் அயலவர்களைவிட அல்லது உறவினர்களைவிட எவ்வளவேனும் தரம் குறைந்தவர்கள் அல்ல என்று காட்டும்படிக்கு, இன்று மனிதர்கள், வீடுகளையும், பொருட்களையும் கொள்வனவு செய்ய கடுமையாக வேலை செய்கின்றார்கள். இதுவும் ஒரு கானல் நீரை போன்றது இத னால் அப்படிச் செய்பவர்கள் ஒரு நாளும் திருப்தியடைவதில்லை. ஆசையானது அலைந்துதோடுகிறதைப்பார்க்கிலும் கண் கண்டதே நலம் என பிரசங்கி கூறியிருக்கின்றார். நாங்கள் மற்றவர்களோடு எங்கள் வாழ்க்கைத் தரத்தை ஒப்பிட்டு அதன்படி வாழ்வோமாக இருந்தால், எங்கள் வாழ்க்கையை மற்றவர்கள் கட்டுப்படுத்துவதற்கு நாங்கள் இடங் கொடுக்கின்றவர்களாக இருப்போம். முன்னேற வேண்டும் என்ற பிரயாசம் நல்லது, ஆனால் எங்கள் நோக்கம் சரியாக இருக்க வேண்டும். தேவனே, நீர் மற்றவனை ஆசீர்வதித்திருக்கின்றீர் ஆகவே, என்னையும் ஆசீர்வதியும் என்று கேட்பது தேவன் முன்னிலையில் சரியாகாது. ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யக் கூடாது. எந்த சூழ்நிலையிலும் எங்கள் நித்திய ஜீவனுக்கு ரிய பிரதானமாக அழைப்பை மறந்து போய்விடக் கூடாது. எங்கள் தேவை என்னவென்று எங்களை அழைத்த தேவன் அறிந்திருக்கின் றார். எனவே அவர் எங்கள் வாழ்க்கையில் போதுமானவர் என்ற மன நிலையோடு வாழ்வோம்.

**1 தீமோத்தேயு 6:6**

**போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்.**

**ஜெபம்:** என்னை அழைத்த தேவனே, போட்டி மனப்பான்மையோடு என் வாழ்க்கையை வாழாமல், நீர் அழைத்த நோக்கத்தை என் வாழ்வில் நிறைவேற்றும்படி வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உன்னதமானவரின் பிள்ளைகள்

எங்கள் எதிராளியானவன் யார்? எங்களுக்கு தீமை செய்பவன் யார்? பிசாசானவனே, பொய்குப் பிதாவும், எங்கள் எதிராளியானவனும், எல்லாத் தீமைகளின் ஊற்றுமாயிருக்கின்றான். சத்தியபரரும், எல்லா நன்மைகளின் ஊற்றுமாகிய கர்த்தராகிய இயேசுவை தங்கள் வாழ்க்கையில் புறக்கணிக்கின்றவர்களை, பிசாசானவன் தன் கருவியாக பயன்படுத்துகின்றான். உதாரணமாக, நீங்கள் நன்மையையே செய்து கொண்டிருக்க, உங்கள் அயலவன் உங்கள் மேல் பொறாமை கொண்டு உங்களுக்கு தீமை செய்துவிட்டான் என்று வைத்துக் கொள்வோம். இந்த சூழ்நிலையிலே, அந்த அயலவன் அறிந்தோ அறியாமலோ, பிசாசானவனின் கருவியாக இருக்கின்றான். நீங்கள் அந்த தீமைக்குப் பதிலடியாக தீமை செய்ய வேண்டும் என்பதையே பிசாசானவன் விரும்புகின்றான். அப்படி நீங்கள் தீமை செய்யும் போது, மற்றவர்கள் உங்கள் கிரியைகளை கண்டு என்ன கூறுவார்கள்? கிறிஸ்தவன் என்று கூறினானே, அந்தத் துன்மார்க்கன் செய்த, தீமைக்கு, இவனும் துன்மார்க்கனைப் போல தீமை செய்தானே என்று கூறுவார்கள் அல்லவா! இதனால், பரம பிதாவின் நாமம் மற்றவர்கள் மத்தியிலே எங்கள் கிரியையின் நிமித்தம் தூஷிக்கப்படும். பிசாசானவன் பெருமையடைவான். ஆனால், உண்மையிலே நாங்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கின்றோமென்றால். அந்த தீமைக்கு தீமை செய்யாமல், பொறுமையாக இருந்து நன்மை செய்ய வேண்டும். எங்கள் நற்கிரியை கண்டு, மற்றவர்கள் பரமபிதாவை மகிமைப்படுத்த வேண்டும். பிசாசானவன் வெட்கமடைய வேண்டும். ஒரு வேளை, தற்சமயம் அந்த அயலவனின் பார்வையிலே நீங்கள் தோற்றுப் போனவர்கள் போல தோன்றலாம். ஆனால், தேவ னுடைய பார்வையிலே நாங்கள் ஜெயம் கொண்டவர்கள். நாங்கள் துன்பங்களை கிறிஸ்துவின் நிமித்தம் சகிக்கும் போது, கிறிஸ்துவின் ஜீவன் எங்களிலே வெளிப்படும். நாங்கள் அவ்வண்ணமாக வாழும் போது, நாங்கள் உன்னதமான தேவனுடைய பிள்ளைகளாயிருப்போம்.

**லூக்கா 6:35**

**உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மை செய்யுங்கள், கைம்மாறு கருதாமல் கடன் கொடுங்கள், அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும் உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள்,**

**ஜெபம்**: இரக்கமுள்ள தேவனே, தீமைக்கு தீமை செய்யாமல், பிசாசானவன் வெட்கமடையும்படியாய், கிறிஸ்துவின் நற்கிரியைகள் என்னில் வெளிப்பட நீர் என்னை நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# விண்ணப்பத்தை கேட்கின்றவர்

நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாறென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. மனிதர்களுடைய வாழ்க்கையிலே, பாவத்தைக் குறித்த குற்ற உணர்வு ஏற்படும் போது அந்த தைரியம் அசைக்கப்படுகின்றது. தேவன் என் வேண்டுதலை கேட்பாரோ? என்று கேள்வி மனிதர்களின் மனதில் தோன்றுகின்றதால் அவர்கள் கொண்டிருந்த விசுவாசம் சந்தேகமாக மாறிவிடுகின்றது. அவர்களுக்குள்ளே இரண்டு மனம் உருவாகிவிடுகின்றது. தேவன் சர்வ வல்லமையுள்ளவர் என்றும் அவர் சகலத்தையும் செய்து முடிக்க வல்லவர் என்ற அறிவும் அவர்களிடம் இருக்கின்ற போதிலும், என் ஜெபத்தைக் கேட்பாரா என்ற எண்ணம் வேர்விட ஆரம்பிக்கின்றது. உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன் சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக. இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான். எனவே எங்கள் சுத்த மனசாட்சியிலே குற்ற உணர்வு ஏற்படும் போது, அந்த குற்ற உணர்வு, நாங்கள் எங்கள் வாழ்க்கையில் தேவனுடைய கற்பனைகளுக்கு எதிரான பாவங்களினால் உண்டானதாக இருந்தால், அதை அறிக்கை பண்ணி விட்டுவிட வேண்டும். சகோதரருக்கு எதிரான துரோகம் என்றால், சம்மந்தப்பட்ட வர்களுடன் ஒப்புரவாக வேண்டும். எங்கள் பெலவீன நேரங்களில் தேவ ஆவியானவர் எங்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கின்றார். அவர் எங்களோடிருந்து வழிநடத்திச் செல்வார்.

**யாக்கோபு 1:5**

**உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்**

**ஜெபம்**: அன்பின் தேவனே, பாவங்களை மூடி மறைத்து, குற்ற உணர்வோடு வாழ் நாட்களை வீணாக்காமல், அவற்றை அறிக்கை பண்ணி, விட்டுவிட்டு, தைரியத்தோடு உம்மண்டை சேர கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவ அன்பே மேலானாது

போதகர் ஐயா, குற்றச் சாட்டுகள் ஒன்று இரண்டு சாட்சிகளால் நிலை வரப்படும், அந்த மனிதன் உங்களுக்கு எதிராக செய்த குற்றத்திற்கு நாங்கள் யாவரும் சாட்சியாக இருக்கின்றோம். எவ்வளவாய் உங் களை அவமானப்படுத்தினான், வேத வார்த்தையின்படி அவன் விசாரி க்கப்பட்டு, எவர்கள் முன்னிலையில் உங்களை அவன் அவமான ப்படுத்தினானோ, அவர்கள் முன்னினை யில் அவன் மன்னிப்பு கேட்க வேண் டும் என்று ஒரு சிரேஷ்ட உறுப்பினர் போதகரிடம் கூறினார். அந்த வயதான போதகரோ, நீங்கள் கூறுவது சபை ஒழுங்கு முறைகளுக்கு ஏற்புடையதாக இருந்தாலும், அவை அனைத்திலும் எங்களை ஆட்கொண்டு நடத்தும் இயே சுவின் அன்பு பெரியது. அந்த மனி தன் செய்தது பிழை, ஆனால் அவன் என்னிடம் வந்து மன்னிப்பைப் பெற்றுக் கொண்டான். நான் பட்ட அவ மானத்தின் வேதனையை நான் அறிவேன். நான் சென்ற வேதனைக் குள்ளாக அந்த மனிதனானவன் செல்வதை நான் விரும்பவில்லை. ஒருவரை ஒருவர் அவமானப்படுத்தும்படிக்கல்ல, நேசிக்கும்படிக்கே எங்கள் இயேசு எங்களை ஏற்படுத்தினார் என தயவாய் கூறினார். பிரியமானவர்களே, தேவன் கொடுத்த ஒழுங்கு முறைகள் அன்புடன் கைக்கொள்ள வேண்டியவைகள். சில வேளைகளில் குற்றங்களை விசாரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் தலைவர்கள் தள்ளப்படுகின் றார்கள். ஆனால், தேவன் கொடுத்த ஒழுங்கு முறைகளை, எங்கள் இருதயக் கடினத்தினிமித்தம் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது. உங்கள் சத்துருக்களை நேசியுங்கள் என்று இயேசு கூறினார். அப்படியானால், எங்கள் உடன் சகோதரரை எவ்வளவு அதிகமாக நாங்கள் நேசிக்க வேண்டும். எங்களை அன்பு செய்த இயேசுவானவர், எங்கள் அவமான ங்கள் யாவையும் தம்மேல் சுமந்து, பகிரங்கமாய், பரிகாச சின்ன மாக சிலுவையில் தொங்கினார். எங்கள் வாழ்விலுள்ள ஒவ்வொரு தவறுதலுக்கும், சட்டத்தை அமுல்ப்படுத்தினால், மனிதர்களில் யார் உயிரோடு இருக்க முடியும்? ஒரு மனிதனும் நிலைநிற்க முடியாது. எனவே, எங்கள் இயேசுவைப் போல, எல்லாவற்றிற்கும் மேலாக, அன்பை கூட்டி வழங்குகின்றவர்களாயிருப்போம்.

**2 பேதுரு 1:7**

**தேவபக்தியோடே சகோ தர சிநேகத்தையும், சகோ தர சிநேகத்தோடே அன் பையும் கூட்டி வழங்கு ங்கள்.**

**ஜெபம்:** அன்பும் இரக்கமும் நிறைந்த தேவனே, சட்டத்தை அமுல்படு த்துகின்றோம் என்று கூறி, நீர் எங்கள் மேல் காட்டுகின்ற அன்பை மறந்துவிடாமல், மற்றவர்களை அன்பு செய்ய என்னை வழிநடத்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவ நீதியும் மனுஷ நீதியும்

நீதியை நிலைநாட்ட வேண்டும் என்று பல மனிதர்கள் இன்று பேசி கொள்வதை நாங்கள் நாளாந்தம் கேள்விப்படுகின்றோம். இந்த உலகத்திற்குரிய எந்த ஸ்தாபனமும் மனிதர்களால் நிறைந்திருக்கின்றது. மனிதர்களே, நீதிமன்றங்களில் இருக்கின்றார்கள். மனிதர்களே அரசாங்கங்களில் இருக்கின்றார்கள். மனிதர்கள் வழியாகவே சட்டரீதியாக இயங்கும் ஸ்தாபனங்களும் சட்டத்திற்கு முரணாக இயங்கி வரும் ஸ்தாபநங்களும் செயற்பட்டு வருகின்றது. ஆகவே, மனிதர்களின் இருதயத்தில் உண்மையான நீதி இருந்தால், அங்கே அநீதிக்கு இடமிருக்காது. மனிதர்களின் உள்ளத்தில் உண்மையான நீதி இல்லாதிருக்கும் போது, அந்த மனிதர்கள் ஆளும் இடங்களில் அநீதி நிறைந்திருக்கும். இதன் விளைவாகவே நாளுக்கு நாள் புதிய சட்டங்களும், புதிய ஒழுங்கு முறைகளும் பல அதிகாரங்களினால் அமுல் படுத்தப்பட்டு வருகின்றது. நீதியின் மூல காரணர் பரலோகிலே ஆளுகை செய்வதால், அங்கே அநீதிக்கு இடமில்லை. பரலோகிலே நீதியை நிலைநாட்டும்படி ஒருவரும் கிரியை நடப்பிக்கத் தேவையில்லை. சட்டநூல் அங்கே தேவையில்லை. இதைச் செய்யாதே, அதை செய் என்று யாரும் அங்கே கூறுவதில்லை. ஏனெனில் பரலோகத்திலே தேவநீதி இயல்பாகவே நிலைத்திருக்கின்றது. இந்த பூலோகத்திலே, அநீதியின் காரணனாகிய பிசாசானவன் கிரியை செய்வதால், பூவுலகிலே அநீதி நடைபெற்று வருகின்றது. வஞ்சிக்கின்ற பிசாசானவன் தேவநீதிக்கு பதிலீடாக, நீதி என்ற போர்வையிலே, மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட “உலக நீதியை” மனிதர்களின் உள்ளத்திலே தூண்டி விடுகின்றான். தேவநீதிக்கு எதிரான காரியங்கள், தேவனுடைய பார்வையிலே அநீதி என்று நிர்ணயிக்கப்பட்ட காரியங்கள், இன்று பல நாடுகளில், நீதியுள்ளது என பிரகடனப்படுத்தப்படுகின்றது. இதனால் தேவநீதி அவமாக்கப்படுவதில்லை. ஆனால் இவைகளில் சிக்குண்ட மனிதர்கள் தங்கள் வாழ்க்கையைப் பாழாக்கிக் கொள்கின்றார்கள். அவர்கள் தேவநீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவநீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள். அவர்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது. எனவே சுய நீதியை பின்பற்றாமல் தேவ நீதியை தேடுவோம்.

**ஏசாயா 64:6**

**எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தை போல இருக்கிறது**

**ஜெபம்:** நீதியின் தேவனே, உம்முடைய நீதி நித்திய நீதி. நீதி என்று எண்ணி, என்னுடைய கொள்கைகளில் தரித்திருந்து, சுய நீதியை நிறைவேற்றாமல், உம்முடைய ராஜ்யத்தின் நீதியை தேட என்னை வழிநடத்தும்.இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவ ராஜ்யத்தின் நீதி

உலக சட்டபிரமாணத்தின் படி, முன்மாதிரியான நெறிமுறையான வாழ்க்கையை வாழ்வதை "நீதி" என்று மனிதர்கள் கூறிக் கொள்கின்றார்கள். இது மனிதர்களுடைய (சுய) நீதி. தேவனுடைய பார்வையிலே எங்கள் வாழ்க்கை சரியாக இருப்பதே தேவ நீதி. இவை இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாக இருக்கின்றது. வேதத்திலே நீதிமான்கள் என்று கூறப்படும் பாத்திரங்களை இந்த உலகத்தார் பகைத்தார்கள். துன்புறுத்தினார்கள், பலரைக் கொலை செய்தார்கள். மனிதர்களின் நீதியின்படி, பாவமறியாத, நீதிபரராகிய இயேசுவை சிலுவையில் அறைந்தார்கள். மனித நீதியில் பயமும் கோபமும் இருக்கும். மற்றவர்கள் அநீதி செய்யும் போது, மனிதர்கள் பயப்படுவார்கள், அதற்கு நீதி செய்ய வேண்டும் என்று கோபம் அடைவார்கள். தேவ நீதியிலே விசுவாசமும் நீடிய பொறுமையும் இருக்கும். இந்த உலகத்தால் உண்டாகும் கேட்டினால், தேவ பிள்ளைகள் பதற்றமடைவதில்லை, மாறாக அவர்கள், தேவன் மேல் கொண்ட விசுவாசத்தினால், வேத வசனம் நிறைவேறும்படி நீடிய பொறுமையுள்ளவர்களாக இருப்பார்கள். உலக நீதி சுயநலமுள்ளது, அங்கே பெருமைவாசமாக இருக்கும். தங்கள் கொள்கைகள் நிலைநாட்டப்படும் வரைக்கும் அயராது உழைப்பார்கள். தேவ நீதி சுயநலமற்றது. அங்கே மாயமற்ற தாழ்மை இருக்கும். அங்கே தேவ சித்தம் நிறைவேறும்படி தங்களை மரணபரியந்தம் ஒப்புக் கொடுப்பார்கள். மனித நீதியானது, மனித புகழையும், சமுதாய அங்கீகாரத்தையும் மேன்மைப்படுத்துவதினால், காலப்போக்கில், பெரும்பான்மையாக மனிதர்களால் விரும்பப்படும் காரியங்கள் அவர்கள் மத்தியிலே நீதியாக எண்ணப்படும். தேவ நீதி, தற்புகழை நாடாமல், மனித பார்வையிலே அற்பமாக எண்ணப்பட்டாலும், தேவ அங்கீகாரத்தையே மேன்மைப்படுத்தும். மனித நீதி, தேவனுடைய வார்த்தையை அற்பமாக எண்ணும். தேவ நீதி, தேவ வார்த்தையையே மேன்மைப்படுத்தும். மனித நீதியின் முடிவு நித்திய ஆக்கினை. தேவ நீதியின் முடிவு நித்திய ஜீவன். தேவ நீதியை பின் பற்றுவோரின் கிரியை சமாதானமும் அதன் கனி அமரிக்கையான வாழ்வுமாகும். தேவ நீதியினிமித்தம் துன்பப்படுபவர்கள் பாக்கியவான்கள். பரலோக ராஜ்யம் அவர்களுடையது என்று இயேசு கூறியிருக்கின்றார்.

**ஏசாயா 32:17**

**நீதியின் கிரியை சமாதானமும், நீதியின் பலன் என்றுமுள்ள அமரிக்கையும் சுகமுமாம்.**

**ஜெபம்**: பரலோக தேவனே, என் வாழ்வில் முழு நோக்கமும் உம்முடைய ய ராஜ்யத்தையும் அதன் நீதியையும் தேடுவதாக இருக்கும்படி அதன் மேன்மையை உணர்ந்து கொள்ளும் பாக்கியத்தைத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

செவ்வாய் | ஆனி 25

📖 மாலை வாசகம் – யோவான் 3:16

# ஏற்றுக் கொள்ளும் இயேசு

எங்களுடைய ராஜாங்கத்திலே நாங்கள் யாவரையும் 'அவர்கள் இருக்கின்றபடி' ஏற்றுக் கொள்வோம். இந்த உலகம் யாவருக்குமுரியதும். யாவரும் அதன் குடிமக்கள் என்றும் பல முற்போக்குவாதிகள் கூறுவதை கேட்டிருக்கின்றோம். அப்படியாக முற்போக்குவாதிகளின் ஆளுகையிலே, மனிதர்களை இருக்கின்ற வண்ணமாக ஏற்றுக் கொண்டு, அதாவது, அவர்கள் தேவனுக்கு எதிராக பாவங்களை செய்ய விருப்பமுள்ளவர்களாக இருந்தால், அது அவர்களுடைய உரிமை என்று கூறி, அவர்கள் செய்யும் பாவத்தை அங்கீகரிக்கும்படி சட்டங்களை அமுல்படுத்தி, அவர்கள் தங்கள் மாம்சம் விரும்பும் ஆசை இச்சைகளை நிறைவேற்றி, பாவ வாழ்க்கையில் அழிந்து போகும்படி வகை செய்து கொடுக்கின்றார்கள். யாவரையும் இருக்கின்ற வண்ணமாக ஏற்று, நித்திய மரணத்திற்கு அழைத்துச் செல்வதே பிசாசானவனின் திட்டம். இந்த அழிவின் திட்டத்திற்கு "நாங்கள் எல்லோரையும் ஏற்றுக் கொள்வோம்" என்று ஒரு வசீகரமான தலையங்கத்தை போட்டுக் கொள்கின்றார்கள். ஆனால், மனித குலத்தின் மீட்பர் இயேசு ஒருவரே, ஒருவரும் கெட்டு அழிந்து போகாதடிக்கு "எல்லோரையும் இருக்கின்ற வண்ணமாக ஏற்றுக் கொள்கின்றார்". வந்தவர்களை அவர்களுடைய பாவ கிரியைகளின்படி தண்டிக்காமல், அவர்கள் மேல் தம் கிருபையை பொழிகின்றார். தம்மிடத்தில் வருகின்றவர்களின் பாவங்களை கழுவி, அவர்களை சுத்திகரித்து, இனி பாவம் செய்யாமல் பரிசுத்த வாழ்க்கை வாழும்படிக்கு, கற்றுத் தந்து, நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கும் வழி நடத்தி செல்கின்றார். வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன் என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்ற இயேசு யாவரையும் அழைக்கின்றார்.

**மத்தேயு 11:28**

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

**ஜெபம்**: உண்மையுள்ள தேவனே, இந்த உலகத்தின் போலியான அழைப்பில் அழிந்து போகாமல்,உம்மை கிட்டிச் சேரந்து, நீர் தருகின்ற இளைப்பாறுதலை கண்டடைய என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தர் வெளிப்படும் நாள்

இந்த உலகிலே மனிதர்கள் மனிதர்களுக்கெதிராக வழக்கு தொடரு கின்ற போது, நீதி மன்றத்தினால், அவர்களுடைய வழக்கை விசார ணை செய்வதற்கு திகதியையும் நேரத்தையும் முன்குறிக்கின்றார்கள். ஒவ்வொரு கட்சியும் தங்களுக்கென சட்டத்தரணிகளையும் சாட் சிகளையும் தெரிந்து கொள்கின்றார்கள். எதை பேச வேண்டும் எதை பேசக் கூடாது என்பதை குறித்து ஆய த்தப்படுத்துவார்கள். வழக்கின் நாளிலே, ஒவ்வொரு கட்சியினரும் தங்கள், தங் கள் ஆதங்கத்தை கூறிக்கொள்வார் கள். ஒரு கட்சியினர் சொல்வதை எதி ர்த்து, மற்ற கட்சியினர் தங்கள் நிலை யை நியாயப்படுத்த முயற்சிப்பார் கள். சில வேளைகளிலே, வழக்கு விசா ரணைகள் பல; நாட்கள், கிழமைகள், மாதங்கள், அல்லது ஆண்டுகளுக்கும் நீடிக்கலாம். கிடைக்கப்பெற்ற தகவல் களின் அடிப்படையில் சட்டபூர்வமாக நீதியரசர் தம் தீர்ப்பை வழங்குவார். இவை இந்த உலகத்தின் ஒழுங்கு முறைகள். இதனால் பலர் நன் மையடைகின்றார்கள். மனிதர்கள் யாவரும் ஒரு நாள் நீதியுள்ள நியா யதிபதியாகிய இயேசு கிறிஸ்துவின் முன்னிலையில் நிற்பார்கள். அங்கே கட்சிகளுக்கும், எதிர்பேச்சுக்களுக்கும் நியாயப்படுத்துதலுக்கும் இடமிருக்காது. அவருக்கு எந்த சாட்சிகளும் தேவையில்லை. அவர் யாவற்றையும் அறிந்தவர். அவர் அவனவனுடைய கிரியைகளுக்கு தக்க பலனை அளிப்பார். பல நாடுகளிலே, நீதிமன்றங்கள் கூட கால அவ காசம் கொடுக்கின்றார்கள். மேலும், தங்கள் வழக்குகளை உயர் நீதிமன்றத்திற்கு தாக்குதல் செய்யும் வாய்ப்புக்களையும் கொடுக்கின் றார்கள். ஏனெனில், மனிதர்கள் யாவரும் உண்மையை பேசுபவர்கள் அல்ல என்பதனால், அவரசப்பட்டு கண்போன போக்கின்படி தீர்ப்பு களை வழங்காமல், சகலவற்றையும் பொறுமையோடு, தங்களால் இய ன்றமட்டும் அலசி ஆராய்கின்றார்கள். அதற்கு இன்னும் அதிகமாக, எங்கள் தேவானாகிய கர்த்தர், மனிதர்கள் மேல் நீடியபொறுமையுள்ள வராக இருந்து, தம்முடைய கிருபையை அதிகதிகமாக பொழிகி ன்றார். எனவே நாங்களும் காலத்திற்கு முன் அவசரப்படாமல் கர்த்த ருடைய வேளைக்காக பொறுமையோடு காத்திருப்போம்.

**மத்தேயு 25:31**

அன்றியும் மனுஷகுமா ரன் தமது மகிமைபொரு ந்தினவராய்ச் சகல பரிசு த்த தூதரோடுங்கூட வரு ம்போது, தமது மகிமையு ள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார்.

**ஜெபம்:** பராக்கிரமுள்ள தேவனே, நீர் மகிமையிலே வெளிப்படும் நாளிலே, நீதியாய் இந்த உலகத்தை நியாயந்தீர்ப்பீர். காலத்துக்கு முன் எதையும் நியாயந்தீர்க்காமல் பொறுமையாக இருக்க என்னை வழிநட த்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தர் கற்பித்தபடி செய்வோம்

நீ எனக்கு இப்படி துரோகம் செய்தாய் அல்லவா? நான் அதை ஒரு பொருட்டாக எண்ணாமல், உனக்கு நன்மை செய்தேன் அல்லவா? என்று ஒரு எஜமானன் தன் வேலைக்காரனிடம் அவ்வப்போது கூறிக் கொள்வான். இப்படியாக பல ஆண்டுகள் சென்ற பின்பு, அந்த வேலைக்காரன், “ஐயா! நான் தவறு செய்தது மெய், நீங்கள் இரங்கியதும் மெய். அந்த நாளிலிருந்து நான் உங்களுக்கு வேறு ஏதாவது குற்றத்தை செய்தேனா? அந்த சம்பவம் நடந்து பல ஆண்டுகள் கடந்து விட்டதே, நீங்கள் ஏன் திரும்பத் திரும்ப அந்த பழைய சம்பவத்தை புதுப்பிக்கின்றீர்கள் என்று மனவருத்தத்துடன் கூறினான். ஆம் பிரிய மானவர்களே, மனிதர்களாகிய நாங்கள், மற்றவர்கள் எங்களுக்குச் செய்த குற்றத்தை இலகுவில் மறந்து போவதில்லை. அதே வேளையிலே, மற்றவர்களுக்கு நாங்கள் செய்த நன்மைகளை பேசுவதற்கும் பின் நிற்பதில்லை. இயேசுவை நேசித்த அவருடைய ஊழியராகிய பேதுரு என்பவர், ஒரு நாள் இயேசுவை தனக்கு தெரியாது என்று, ஒரு தடவை அல்ல, மூன்று தடவைகள் மறுதலித்தார் சில ஆண்டுகளாக கர்த்தரோடு, இருந்து, அவரிடம் பல நன்மைகளை பெற்றவன். அவரோடு உணவுண்டவன். கர்த்தருடைய மறுரூபக் காட்சியை கண்டவன். அப்படி இருந்தும் தன் எஜமானனை மறுதலித்தான். எந்த எஜமானன் இதனை ஏற்றுக் கொள்வான்? ஆனால், கர்த்தர் மரணத்தை வென்று உயிர்தெழுந்த பின்பு, தம்முடையவர்களைத் தேடி வந்தார். பேதுருவை திபேரியா கடலோரமாக சந்தித்தார். நீ ஏன் எனக்கு இப்படிச் செய்தாய் என்று அவர் கடிந்து கொள்ளவில்லை. தம்முடைய ஊழியனை சாத்தான் சோதிப்பான் என்று அறிந்த போது, தன் ஊழியன் விசுவாசத்தில் தளர்ந்து போகாமல் இருக்கும்படி வேண்டுதல் செய்தார். பேதுருவை மறுபடியும் கண்ட போது, நீ என்னை நேசிக்கின்றாயா என்று கேட்டார். பிரியமானவர்களே, எங்கள் கர்த்தர் கற்பித்தபடி, செய்து காட்டியபடி, ஒருவன் குற்றத்தில் அகப்பட இருந்தாலும், அவன் தெரிந்தோ தெரியாமலோ அகப்பட்டுவிட்டாலும், அவனுக்காக நாங்கள் ஜெபிக்க வேண்டும். கர்த்தர் கூறியது போல அன்பாக இருக்க வேண்டும்.

**யோவான் 13:34**

**நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்**

**ஜெபம்**: என்னை நேசிக்கின்ற நல்ல தேவனே, நீர் கூறிய அருள்வாக்கின்படி, இதயபூர்வமாக நாங்கள் ஒருவரில் ஒருவர் அன்பாக இருக்கத்தக்கதாக உணர்வுள்ள இருதயத்தைத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உள்ளான மாற்றங்களின் கனிகள்

நீங்கள் நாட்டிய திராட்சை செடியானது, செழிப்பாக வளர்ந்து, படர்ந்து அதன் காலத்தில் தன் கனியைக் கொடுத்தால் எவ்வளவு சந்தோஷப்படுவீர்கள்! ஆனால், அப்படி பெரிதாகவும் செழிப்பாகவும் வளர்ந்தும், கொடுக்கப்பட வேண்டிய மூலவளங்கள் யாவும் கொடுக்கப்பட்டும், அந்த செடி பல ஆண்டுகளாக, கனி கொடாமல், இடத்தைப் பிடித்துக் கொண்டிருந்தால் எவ்வளவு காலம் அதை விட்டுவைப்பீர்கள்? நாங்கள எங்கள் வாழ்க்கையில் கனி கொடுக்கும்படியாய் "உயர்குல" திராட்சை செடியாக கர்த்தர் நாட்டியிருக்கிறார். எங்கள் வாழ்க்கையில் கர்த்தர் விரும்பும் தெய்வீக குணாதிசயங்களாகிய நற்கனிகள் வெளிப்பட வேண்டும். நாங்கள் கிறிஸ்துவினுடையவர்கள் என்பது எதினாலே உறுதிப்படும் என்று சற்று ஆராய்ந்து பார்ப்போம். முதல் பகுதியாக மனிதர்கள் காணக்கூடிய கிரியைகள்: தவறாமல் ஆலயத்திற்கு செல்லுதல், வேதத்தை கற்றுக் கொள்ளுதல், உபவாச ஜெபம் செய்தல், தானதர்மங்களை செய்தல், வெளியரங்கமான தீய பழக்கங்களை விட்டுவிடுதல். இரண்டாவது பகுதியாக: சபிக்கிறவர்களை ஆசீர்வதித்தல், நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம் செய்தல், தீமை செய்பவர்களுக்கு நன்மை செய்தல். இந்தப் பகுதிகளில் எவை ஒரு கிறிஸ்தவனின் குணாதிசயங்களை வகையறுக்கின்றது? சற்று தரித்திருந்து சிந்தித்துப் பாருங்கள். இரண்டு பகுதியும் நாங்கள் கிறிஸ்துவை சார்ந்தவர்கள் என்பதை உறுதிப்படுத்தும். முதல் பகுதியிலே நாங்கள் கற்றவைகளின் பெறுபேறுகள், இரண்டாவது பகுதியிலுள்ள எங்கள் வாழ்க்கையின் கனி வழியாக உறுதிப்படுத்தப்படும். மனிதர்களுடைய பார்வையில், அவர்களின் அளவுகோல், முதல்ப் பகுதியுடன் நின்றுவிடும். ஆனால், இருதயங்களை ஆராய்ந்தறிகின்றவர், எங்கள் கனிகளை பார்க்கின்றார். நாங்கள் வேதத்தை கற்றுக் கொள்ளுதல் அவசியம், அதைவிட கற்ற வார்த்தைகளுக்கு கீழ்ப்படிதல் இன்றியமையாதது. ஜெபம் இன்றியமையாதது, ஆனால், எங்களுக்கு எதிராக குற்றம் செய்தவனை குறித்த கசப்பு மனதில் இருக்கும் என்றால், எப்படி முழுமனதோடு தேவனை ஆராதிக்க முடியும்? எனவே, உள்ளான மாற்றங்களின் கனிகள் எங்களில் வெளிப்படட்டும்.

**எரேமியா 2:21**

**நான் உன்னை முற்றிலும் நற்கனிதரும் உயர்குலத் திராட்சச்செடியாக நாட்டினேன்**

**ஜெபம்**: பரலோக தேவனே, நீர் விரும்பும் நற்கனிகளாகிய திவ்விய சுபாவங்களை என் வாழ்வில் வெளிக்காட்டி வாழும்படிக்காய் நீர் என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஆசீர்வாதத்தின் வார்த்தைகள்

ஆதியிலே முதல் மனிதனாகிய ஆதாம் தேவனுடைய கட்டளையை மீறி, பிசாசின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்ததால், அவன் நிமித்தம் பூமி சபிக் கப்பட்டாயிற்று. அதனால் மனிதர்கள் வாழ்நாளெல்லாம் வருத்தத் தோடு அதன் பலனை புசிக்கின்றார்கள். இந்த சாபத்திலிருந்து மனித குலத்தை மீட்கும்படியாய் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகிற்கு வந்தார். இருளின் அதிகாரத்திலிருந்து தம்முடைய உன்னதமான ஒளியினிடத் திற்கு எங்களை அழைத்திருக்கின்றார். ஏனெனில், எற்கனவே சபிக்கப்பட்டிரு க்கும் இந்த உலகத்தை சபிக்கும்படி க்காய் அல்ல, சாபத்திலிருக்கும் மனி தர்கள் இயேசுவின் பேரொளியை காணும்படிக்காய் எங்களை வேறு பிரி த்திருக்கின்றார். நாவினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கி றோம். தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரையும் அதினாலேயே சபிக்கிறோம். துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிரு ந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது. ஒரே ஊற் றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா என்று பரிசுத்த வேதாகமத்திலே வாசிக்கின்றோம். எனவே எங்கள் வாயிலிரு ந்து சாபத்தின் வார்த்தைகளை பேசாதபடிக்கு எங்கள் வாயின் வார் த்தைகளை குறித்து கவனமுள்ளவர்களாக இருக்க வேண்டும். சில வேளைகளிலே, கீழ்ப்படியாத தங்கள் சொந்த பிள்ளைகளின் கிரி யைகளினாலே, அறிந்தோ அறியாமலோ பெற்றோர்கள் கூட சாபமான வார்த்தைகளை பேசிவிடுகின்றார்கள். “நீ துன்பப்படப் போகின்றாய்” “நீ உருப்படமாட்டாய்” என்று கூறிவிடுவார்கள். கீழ்ப்படியாத பிள்ளை கள் கஷ்டங்களை எதிர்நோக்கப் போகின்றார்கள் என்பது உண்மை. எனவே நாங்கள் கோபங் கொண்டு, மேலும் அவர்களை சபிக்காமல், அவர்களின் மனமாற்றத்திற்காக தேவனை தினமும் வேண்டிக் கொள்ள வேண்டும். பிசாசின் அடிமைத்தனக் கட்டுக்களில் அகப்பட்டு, மனக் கண்கள் குருடுபட்டிருக்கும் மனிதர்கள் விடுதலையடையும்படி யாய், தேவனுடைய வார்த்தைகளை அறிக்கை யிட்டு, பிசாசின் அந்தகார கிரியைகளை ஜெயம் கொள்ளும்படி ஜெபம் செய்யுங்கள். பிள்ளைகளை கண்டித்து தண்டிக்க வேண்டிய வேளைகள் உண்டு ஆனால் அவர்களை சபிக்காமல் ஆசீர்வதியுங்கள்.

**ரோமர் 12:14**

**உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள், ஆசீர்வதிக்கவேண்டியதேயன்றி சபியாதிருங்கள்**

**ஜெபம்:** ஆசீர்வதிக்கும் தேவனே, நான் கோபமடைந்து மற்றவர்களை சபிக்காதபடிக்கு, என் வாயின் வார்த்தைகளை காத்துக் கொள்ளும்படிக்கு என்னை உணர்த்தி வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவனுடைய கட்டளைகள்

தேவனுடைய கட்டளைகள் யாவும் அன்பினாலே நிறைவேற்றப்பட வேண்டும். கடமையுணர்வு நல்லது, ஆனால் அப்படியாக நாங்கள் கடமைக்காக தேவ கட்டளைகளை நிறைவேற்றும் போது, முழுமனம் அங்கே இருக்காது. எடுத்துக் காட்டாக, "நான் இன்று கட்டாயமாக அந்த விழாவிற்கு போக வேண்டும், எனக்கு கடமை உண்டு" என்று தங்கள் நற்பெயரைக் காக்க மனிதர்கள் கிரியைகளை நடப்பிப்பதுண்டு. ஆனால் தேவனுடைய கட்டளைகளை நாங்கள் அப்படி நிறைவேற்றுவதில் பயனில்லை. முதலாவதாக கட்டளைகளை எங்கள் வாழ்வில் நிறைவேற்ற வேண்டும். மற்றவர்களுடைய வாழ்வை சரிப்படுத்தும்படி, அவர்களை நாங்கள் நியாயந்தீர்ப்போமென்றால், தேவனுடைய அன்பு இன்னும் எங்களது இருதயங்களை ஆளுகை செய்யவில்லை என்பதே பொருள். எப்படியென்றால், விபசாரம் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, இச்சியாதிருப்பாயாக என்கிற இந்தக் கற்பனைகளும், வேறே எந்தக் கற்பனையும், உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்கிற ஒரே வார்த்தையிலே முழுமையாய் அடங்கியிருக்கிறது. ஆகவே, பிறனிடத்தில் அன்பு கூரும் நாங்கள், முதலாவதாக, எங்கள் வாழ்வில் நாங்கள், பிறனுக்கு எதிராக, விபசாரம், களவு, பொய், மற்றும் இச்சைகளை ஒழித்துவிட வேண்டும். தேவ அன்பு ஒரு மனிதனில் நிலை கொண்டிருந்தால், அவன் தேவனுடைய கற்பனைகள் யாவையும் வாஞ்சையுடன் நிறைவேற்றுவான். தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன் தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்? இன்று பல மனிதர்களின் கண்கள், கட்டளைகளை நிறைவேற்றும்படி, மற்றவன் மேல் நோக்கமாக இருக்கின்றது. அதாவது, அவன் இப்படி செய்து விட்டான், ஆகவே, அவன் இந்த சட்டத்தின்படி தண்டிக்கப்பட வேண்டும் என்று அதிக கரிசனையோடு இருக்கின்றார்கள். நாங்கள் அப்படியிருக்கலாகாது. தேவனை அன்பு கூரும் நாம், முழுமனதோடு அவருடைய கட்டளைகளை எங்கள் வாழ்வில் நிறைவேற்றுவோம்.

**யோவான் 14:15**

**நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக் கொள்ளுங்கள்.**

**ஜெபம்:** பரலோகத்திலிருக்கின்ற எங்கள் பிதாவே, உம்முடைய கட்டளைகளை, முழுமனதோடு, என் வாழ்விலே நிறைவேற்றும்படிக்காய் என்னை வழிநடத்திச் செல்வீராக.இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கி றேன் ஆமேன்.

# அன்பான வாசகர்களுக்கு!

**‘உள்ளான மனிதன்’** பிரதியை பெற்றுக் கொள்ளுங்கள்! உள்ளான மனிதன் சஞ்சிகையின் **மென்பிரதியை** எங்கள் இணையத்தளத்தில் வாசிக்கலாம். அத்துடன் அனுதின தியானம் என்ற தலைப்பின் கீழ், ஒரு **தனிப்பட்ட இணைய -த்தள பக்கமும்** பதிவேற்றப்பட்டுள்ளது. புத்தகங்களை தபால் மூலம் பெற்றுக்கொள்ள, உங்கள் முகவரியை, மின்-அஞ்சல் ஊடாகவோ, அல்லது தொலைபேசி ஊடாகவோ எங்களுக்குத் தெரியப்படுத்தலாம். அல்லது அடுத்த பக்கத்தி லுள்ள விண்ணப்பப் படிவத்தில் உங்கள் விபரங்களை பதிவு செய்து, எங்கள் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

மாதாந்தம் இந்த சஞ்சிகையை வாசித்த பின்பு மற்றவர்களு டனும் பகிர்ந்து கொள்ளுங்கள். கூடுமானவரை, தேவனை அறியாதவர்களுடன் இதனை பகிர்ந்து கொள்ளுங்கள். தேவ -னுடைய ஜீவ வார்த்தைகள், அந்தந்த நாளுக்கு மட்டுப்படுத் தப்பட்டவைகளல்ல.

தற்போது கிறிஸ்தவ ஆவிக்குரிய ஐக்கியமொன்றிலும் இணைந்திருக்காவிட்டால், எங்களுடன் சேர்ந்து தேவனை ஆராதிக்கும்படியாக உங்களை வரவேற்கின்றோம்.

**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக் கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வள வாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்**. (யோவான் 3:16)

**கிருபையின் கூடாரம் அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

உள்ளான மனிதன் மாதாந்த பிரதி

# விண்ணப்பப் படிவம்

முழுப் பெயர் FULL NAME:

முகவரி ADDRESS:

நகரம் CITY:

தபால் குறியீடு POSTAL CODE:

மாநிலம் PROVINCE:

தொலைபேசி TELEPHONE:

மின் அஞ்சல் E-MAIL:

விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட வேண்டிய முகவரி

**THE INNER MAN – GTAC**
**7700 MARKHAM ROAD**
**P. O. BOX 3052**
**MARKHAM, ON L3S 4T1**

MAIL THE APPLICATION FORM TO THE ABOVE MENTIONED ADDRESS

gtachurch.ca

gtachurch.ca

210 Silver Star Blvd., Unit 807, Scarborough, ON M1V 5J9

www.gtachurchnet.ca ☎ 416.613.2909